Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 25 (23.09.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 353

# மக்கள் ஏற்றுக்கொண்ட நிர்வாக அமைப்பின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதே சாத்தியம்!



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நிதிநிறுவனப் பிரதிநிதிகள்.

## சர்வதேச நிதிநிறுவனங்களிடம் புலிகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கில் சீர்குலைந்து போயுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களைச் சீரமைத்து, இங்குள்ள மக்களின் வாழ்வாதார அடிப்படைத் தேவைகளை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவதற்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானதெனவும், தமிழர் தாயகத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கு ஊடாகவே மேற்கொள்வது சாத்தியமெனவும் சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

நேற்றுக்காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள சமாதானச் செயலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களுக்கும் இடையே சந்திப்பொன்று நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தூயவன், சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், சமாதானச் செயலக உதவிப் பணிப்பாளர் செல்வி ஆகியோரும்,

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதி ஜெரிமிக் காட்டர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியப் பிரதிநிதி மிக்குவல் பேமியோ, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி ஜோன் ஆர் கூனி, உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் கரோல்ட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியில் -

இன்றைய சந்திப்பு முக்கியமாக இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாக எமது தலைமைப்பீடத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தளபதிகளுக்கும் கதிர்காமர் எடுபிடியாகிவிட்டார் பாருங்கோ...!

## திருமலை பாதுகாப்பு நிலைவர அறிக்கையை கடற்படை தளபதியே வெளியிடக் கோரினார்!

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

கிழக்கு பிராந்திய கடற்படை அதிகாரியே திருகோணமலை பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான அறிக்கையை ஊடகங்கள் மூலமாக வெளியிடும்படி என்னைக் கேட்டிருந்தார் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

திருகோணமலை பாதுகாப்பு தொடர்பான அறிக்கையை வெளியிட்டு கடற்படைக்கு லக்ஷ்மன் கதிர்காமர் பல சிக்கல்களைத் தோற்றுவித்துவிட்டார் என கடற்படைத் தளபதி தயா சந்தகிரி வெளியிட்ட கருத்துக்கு மறுப்புத் தெரிவித்தே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை பாதுகாப்பு தொடர்பான அறிக்கையை என்னிடம் கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி ஒப்படைத்திருந்தார். அவர் ஜனாதிபதி தங்கள் மூலமாக இந்த அறிக்கையை வெளியிடும்படி, கூறியிருந்தார். அதற்கு ஏற்பவே நான் இந்த அறிக்கையை ஊடகங்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கடமையிலிருந்து ஓய்வுபெற்ற

## சுகாதார சேவை ஊழியரை கடமைக்கு திரும்ப அழைப்பு!

### சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன விடுத்தார்

அனைத்து வைத்தியசாலைகளிலும் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள ஊழியரை கடமைக்கு வருமாறு - சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன அழைப்பு விடுத்துள்ளார். சுகாதார ஊழியர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தால், வைத்தியசாலைகள் செயலிழந்துள்ளன.

இந்தநிலையில், நோயாளிகளின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, வைத்தியசாலைகளில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்கள் அனைவரையும், கடமைக்கு திரும்புமாறும் அவர்களுக்கு ஓய்வூதியத்துடன் சம்பளமும் வழங்கப்படும் என, (10 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்ப

## புலிகளின் பத்து தளபதிகள் காத்தான்குடிக்குச் செல்வர்!

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி த.ரமேஸ் தலைமையிலான பத்துத் தளபதிகள் எதிர்வரும் ஒக்ரோபர் 19 ஆம் திகதி முஸ்லிம் கிராமமான காத்தான்குடிக்குச் சென்று தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவைக் கட்டியெழுப்பும் முயற்சியில ஈடுபடவுள்ளனர்.

1990 ஆண்டிற்குப் பின்னர், விடுதலைப் புலிகளின் தளபதிகள் உத்தியோகபூர்வமாக முஸ்லிம் கிராமத்திற்கு நேரடியாகச் செல்வது இதுவே முதல் தடவையாகும்.

நேற்றுமுன்தினம் காலை விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஷ், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், நிதித்துறைப் பொறுப்பாளர் குகனேசன், நகரப்பகுதிப் பொறுப்பாளர் சேனாதிராசா ஆகியோருக்கும் காத்தான்குடி முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளான ஏ.எல்.அப்துல்கபுர், யூ.எல்.முவின், ஏ.எல்.எம். அலியார், சாந்தி முகைதீன், எம்.எல். விலால்ஹாஜியார், எம்.எல்.லத்தீப், ஏ.சீ.எம்.றபீக், கிலுால்அலி ஆகியோர் அடங்கிய குழுவினருக்கும் இடையிலான (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தில் பல கோமாளிகள்; இவர்களின் தலைவர் பிரதமர் ரணில்!

### கிண்டலடிக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

தற்போதைய அரசாங்கத்தில் பல கோமாளிகள் இருக்கின்றார்கள். இவர்களின் தலைவராக பிரதமர் ரணில் இருக்கிறார். ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஒரு நகைச்சுவைக்காகவே நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது 65 ஆவது தடவையாக வெளிநாடு சென்றுள்ளார். ஆனால், எனது ஆட்சிக்காலத்தில் 2 அல்லது 3 தடவை மட்டுமே தான் வெளிநாடு சென்றிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

களுத்துறையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், சில அமைச்சர்களுக்கு எவ்வாறு ஒரு அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதென்றே தெரியாதிருப்பதாகவும், அவற்றைப் பார்த்தால் தான் மௌனமாக இருந்து விடுவதாகவும், ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மக்கள் இந்த அரசுக்கு பெரும்பான்மைப் பலத்தைக் கொடுத்துள்ளார்கள். எனவேதான் அவர்கள் ஆட்சி செய்வதற்கு அனுமதித்துள்ளேன்.

தற்போது, புதிய அரசொன்று தேவைப்படுகிறது. எனவே, ஜே.வி.பியும் இதில் பங்குபற்றுவதற்கு முன்வரலாம் எனவும் தெரிவித்தார்.

## கூட்டணி முயற்சி தோல்வியல்ல; கருத்து முரண்பாடுகளே காரணம்!

### ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியும் அறிக்கை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி அமைக்கும் முயற்சிகள் முறியவில்லை. இரு கட்சிகளுக்கும் இடையில் சில விடயங்களில் கருத்துமுரண்பாடு ஏற்பட்டதாலேயே, அவை ஒத்திவைக்கப்பட்டதாக இரு கட்சிகளும் இணைந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெளியிட்ட இந்தஅறிக்கையில் ஐ.தே.கட்சி, இரு கட்சிகளும் கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி அடைந்துள்ளதாக கருதுகிறது. அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

இரு கட்சிகளும் கூட்டணி அமைக்கும்போது, சில அதிகாரங்களை பொறுப்பேற்பதில் ஏற்பட்ட முரண்பாட்டினால், கூட்டணி அமைப்பதை இடைநிறுத்தியுள்ளோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226?97
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் செயற்பாடுகள் விஞ்ஞான மற்றும் அரசியல் ரீதியாக அமைந்தவை!

## நினைவு நிகழ்வில் யாழ்.அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி



கல்வியாளர்கள் திலீபனை பெரும் சிந்தனைவாதியாக எண்ணியுள்ளார்கள். திலீபன் விஞ்ஞான ரீதியாகவும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்தான். அறிவியல் ரீதியாக உணர்ந்து எமது இனத்தைக் காப்பாற்ற தன்னையே தந்தான் எனத் தெரிவித்தார். யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேற்று மாலை நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் எஸ்.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஏற்றி வைத்தார். பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், ஊழியர் சங்கத் தலைவர், முகாமைத்துவ பீட மாணவ ஒன்றியத் தலைவர் ஆகியோர் ஏற்றினர். ஈகைச்சுடரை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப் போராட்டத்தில் கல்வியாளர்களின் பணி மிக முக்கியமானது. வாழ்வின் இலட்சியத்தை அடையும் வழி கல்வி. கல்வி ஒரு இனத்தை, சமூகத்தை உயர்த்தும். நல்வழிப்படுத்தும். மாணவர்களுடைய சிந்தனை வெளிப்பாடு நல்ல சமூகத்தை உருவாக்கும்.

ஒரு விடுதலைப் போராட்டத்துக்குத் தேவையான வளர்ச்சி கல்வியாளர்களில் தங்கியுள்ளது. இதனாலேயே பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகிய எமது போராட்டம் இன்று சர்வதேச மட்டத்தில் பேசப்படுகிறது.

தன்னை உருக்கி எம் ஒவ்வொருவரது இருப்பிற்கும் வழிகாட்டியானான் திலீபன்.

எமது இனத்திற்கு ஒளிமிக்க வார்த்தைகளை திலீபன் வெளிக்காட்டினான். எமது இனம் விழிப்போடு இருக்கவேண்டும் என அடிக்கடி கூறிவருவான். திலீபனது தூர நோக்கான, தீர்க்கதரிசனமான பார்வை எமது போராட்டத்தை தளம் காண வைத்தது.

திலீபன் யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது நான் ஓர் சிறிய போராளியாக இருந்தேன். திலீபனது அன்பு, ஆளுமை, அறிவு அவரிடம் இருந்த பற்றுப்பாசம் எல்லாம் போராளிகளை மென்மேலும் நல்வழிப்படுத்தியது.

எமது மக்கள் குளத்திலுள்ள நீர் மாதிரி, நாங்கள் ஒவ்வொருவரும் அதிலுள்ள மீன்கள் போல. நாம் மக்களை நீராக நேசிக்கிறோம் என தீலிபன் அடிக்கடி சொல்வார். திலீபன் தனது தியாக வேள்வியை நிறைவு செய்து உயிர்நீத்து 3 ஆண்டுகளின் பின் கோட்டையில் புலிக் கொடி ஏறியது.

மாணவர்களுடைய சிந்தனை வெளிப்பாடு சமூகத்தை விழிப்படையச் செய்வதுடன் சமூகத்தை மாற்றி அமைக்கும்.

அகிம்சை வழியில் தொடங்கிய எமது போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாறி வரலாற்று ரீதியாக வெற்றிகளை பெற்றுக்கொண்டது. இன்று அமைதியான முறையில் அழிவுகளற்ற நிலையில் எமது போராட்டம் உள்ளது. இவற்றுக்கு எமது தலைவரின் மெய்ஞான முறையிலான செயற்பாடுகள்தான் காரணம். இதனை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

தமிழர்களைத் தமிழர் ஆளவேண்டும். சிங்களவர்களை சிங்களவர் ஆளவேண்டும். அப்போதுதான் இலங்கையில் மகிழ்ச்சி ஏற்படுமென்று அன்று தந்தை செல்வா சொன்னார்.

அன்று அதனைத் தூக்கியெறிந்தவர்கள் இன்று ஏற்றுள்ளார்கள். அதற்குக் காரணம் எமது இயக்கத்தின் பலம்.

இன்று எமக்குத் தேவை சர்வதேச ஆக்கிரமிப்பு அல்ல. ஆதரவுதான். எமக்கென ஒரு தேசம் உருவாகும்போது சர்வதேசம் அதனை அங்கீகரிக்கும். இந்தியாகூட அப்போது தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றும். இது உறுதி.

அன்பு என்றால் திலீபன். ஆளுமை என்றால் திலீபன். அறிவு என்றால் திலீபன். இவை நான் அவருக்கு கீழே ஒரு சிறு போராளியாக இருந்தபோது உணர்ந்தவை. எமக்கு விடிவு விரைவில் கிடைக்கும். அப்போது திலீபன் உட்பட எமது மாவீரர்கள் கண்ட கனவு நனவாகும் எனத் தெரிவித்தார். (91)





சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் - நேற்று நடைபெற்ற தியாகி லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவுதின அஞ்சலி நிகழ்வின் போது, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் சுடரேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளாகள், மாணவர்களைப் படத்தில் காணலாம்.

# நெடுந்தீவில் வழங்கப்படும் குடிநீர் மனித பாவனைக்கு உதவாதது!

## பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

நெடுந்தீவில் குழாய்மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் குடிநீர், மக்களின் பாவனைக்கு உதவாத வகையில உவர்ப்புத் தன்மையடைந்துள்ளது. இதனால் குடிநீருக்கென மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

பருவமழை பெய்யாதமையின் காரணமாகவும், கடும் வரட்சி காரணமாகவுமே இந்தநிலை ஏற்பட்டுள்ளது. நன்னீர் உள்ள கிணறுகளும் வரட்சி காரணமாக நீர் வற்றியுள்ளதால், பெரும் நீர்த்தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த நிலையில் குழாய்மூலம் விநியோகம் செய்யப்பட்டுவரும் நீர்த்தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள விநியோகக்குழாய்கள் பழுதடைந்துள்ளமையால், பெருமளவு நீர் வீண விரயமாகி வருகிறது. இந்த நீரினை வேறு தேவைகளுக்கும் சிலர் பயன்படுத்தி வருவதனாலும், மேலும் மோசமான நிலைக்கு இந்தநீரின் தன்மை மாற்றமடைய வாய்ப்புக்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# திலீபனின் நினைவு ஊர்தி இன்று தென்மராட்சிக்கு!

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி - திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி, மக்கள் அஞ்சலிக்காக, தென்மராட்சிக்கு செல்லவுள்ளது.

இன்றுகாலை 8 மணிக்கு வரணி சந்தையிலிருந்து ஆரம்பித்து, பின்வரும் ஒழுங்குமுறையில் மக்கள் அஞ்சலிக்காக செல்கிறது.

வரணி சந்தை, வரணி மகாவித்தியாலயம், சுட்டிபுரம் அம்மன் கோவிலடி, எருவான் சந்தி, கொடிகாமம் துயிலுமில்லம், கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம் சந்தி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம் கச்சாய் வீதி தேவாலயம், கச்சாய் வாகையடிச் சந்தி, சீலன் பூங்கா, அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மீசாலை நாற்சந்தி, லதினா தொலைத்தொடர்பகம், புத்தூர் சந்தி, மீசாலைச்சந்தி, ஐயா கடைச்சந்தி, அரசடிச் சந்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி பிரதேச செயலகம், நுணாவில் அமிர்தாம்பிகை பாடசாலை, நுணாவில் சந்தி, வைரவர் கோவிலடி, கைதடிச்சந்தி, நாவற்குழிச் சந்தியை சென்றடைந்து பின்னர் நல்லூர் கோட்டத்தினரிடம் கையளிக்கப்படும்.

# தமிழ்மக்கள் தொடர்ந்தும் துன்பத்தை சுமக்கமுடியாது; சர்வதேசத்துக்கு பொங்குதமிழ் மூலம் எடுத்துரைப்போம்!

## தமிழ்மாணவர் ஒன்றியம் அறிக்கை

(வவுனியா)

நீண்டகாலமாக தமிழ்மக்கள் யுத்தத்தினால் எதிர்நோக்கிய துன்பங்களை, இனியும் சுமக்கமுடியாது என்பதை, பொங்குதமிழ் மூலம் சர்வதேசத்திற்கு எடுத்துரைப்போம்.

இவ்வாறு வவுனியாவில் நாளை நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடாபாக, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ்மாணவர் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த குரலாக, வவுனியாவில் எழும் பொங்குதமிழ் எனும் ஏகோபித்த பேரவை - தமிழ் மக்களின் சுயநிர்ணய சமூகத்திற்கு எடுத்துச் செல்லும், புனிதமான சமாதான சிந்தனையுடன், தனிமனித விடுதலையினை வலியுறுத்தும் நோக்கிலும், எமது நிலம் எமக்கு வேண்டும், இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்கிறோம் எனச் சொல்லி, இன்று தமிழர்களின் தேவையினை நிறைவு செய்யும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்படும். இடைக்கால நிர்வாகத் தீர்வுச் சிந்தனை எங்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்னும் நோக்கில், பொங்கியெழும் பொங்குதமிழ் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்துகிறோம்.

தமிழர்கள் நீண்டகாலமாக இந்த நாட்டில் பெற்ற துன்பங்கள், வார்த்தைகளால் கூறமுடியாது. 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட போரின் வடுக்களை எங்களால் மறக்கமுடியாது. இனிமேல் தமிழ்மக்கள் இவ்வாறானதொரு துன்பங்களைச் சுமக்கமுடியாது. இதனைச் சர்வதேசம் உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வாறான துன்பங்களிலிருந்து தமிழர்கள் விடுதலை பெறுவதற்கு வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் முழுமையான அதிகாரங்களோடு வழங்கப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி, வவுனியா வாழ் தமிழர்கள் எல்லோரும் ஒரு குடையின் கீழ் நின்று குரல் கொடுப்போம் எனக்கூறி நிகழ்வினை ஒழுங்கு செய்வதில் அகமகிழ்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)


# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில்

## சிறுவர் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

* காலம் :- 2003 ஒக்ரோபர் 01

* செயற்படு இடம் :- (யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மாவட்டங்கள் உள்ளடங்கலாக)

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானம்

(மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கள் உள்ளடங்கலாக)

கல்லடி சிவானந்தா வித்தியாலய மைதானம்.

### விளையாட்டு நிகழ்வுகள்

குழு விளையாட்டு

1. கரப்பந்து - ஆண்கள் (17 வயதுக்குட்பட்டோர்)
2. வலைப்பந்து - பெண்கள் (17 வயதுக்குட்பட்டோர்)
3. உடற்பயிற்சி கண்காட்சி (இசையும், அசைவும்) - 12 நிமிடம்

* மேற்படி செய்யப் பெறும் முதல் மூன்று நிலைக்குரிய அணிகளுக்கு சிறப்பு பரிசில்களும், கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும். தங்களது இல்லத்தின் பிள்ளைகளின் ஆற்றலை வெளிக்கொண்டுவரும் முகமாகவும் சர்வதேச சிறுவர் தினத்தன்று எமது பிரதேசத்தில் சிறுவர்களைப் பாதுகாத்து மதிக்கப்படும் நிலையை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நிகழ்வாகவும் அமைய தங்களது இல்ல சிறுவர்களின் விளையாட்டு மூலம் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தங்கள் இல்லம் பங்குகொள்ள விரும்பும் குழு விளையாட்டு விவரங்களை இல்ல நிர்வாக இயக்குநர் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

* இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் 24.09.2003 இற்கு முன்னர் அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்
தலைமைச் செயலகம்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
கண்டி வீதி, கிளிநொச்சி.

மேலதிக விபரங்களுக்கு
021-222-3947

(சி-1578)



ராஜா யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன நடித்த

ராமச்சந்திரா

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)



நிறஞ்சனாஸ் சங்கானை

அஜீத், லைலா நடித்த

தீனா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

ULTRA FORCE- 2

(சி-1425)

# சுதந்திரக்கட்சிக்கு எதிராக ஜே.வி.பி. எதிர்ப்பு ஊர்வலம்

## கண்டியிலிருந்து கொழும்புக்கு நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

கண்டியிலிருந்து - கொழும்பிற்கு, எதிர்வரும் சனிக்கிழமை சுதந்திரக் கட்சிக்கெதிராக - பாரிய எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்த ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கோட்டையான நிட்டம்புவவில் பெருமெடுப்பில் இந்த எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்படவுள்ளது. 'தேசிய தேசப் பற்றாளர் இயக்கம்' என்ற பெயரில் கூட்டமைப்பை உருவாக்கவும், ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இவர்களது இந்த இயக்கத்திற்கு வண.எலலே குணவன்ச தேரரும் - தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில், தனிப்பட்ட அரசியல் கட்சிகளின் கொடிகளினை விடுத்து, நாட்டின் தேசியக்கொடியினை மாத்திரம் உபயோகிக்குமாறும், தேரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மையில் சுதந்திரக்கட்சியுடனான - ஜே.வி.பியின் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததும், ஜே.வி.பிக்கு எதிராக -

ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கவே, இந்த எதிர்பபு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மீனவர் பிரச்சினை குறித்து ஆராய திருமலையில் விசேட கூட்டம்

(திருகோணமலை)

திருமலை கடற்கரையிலுள்ள மீனவ மக்களின் அடிப்படைத் தேவைகள் சம்பந்தமான கூட்டம், நேற்றுத் திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் - கடற்கரைகளில் வாழும் மீனவ மக்களின் அடிப்படை விடயங்களான - வீட்டு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் - அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள், ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பத்தொன்பது மாதகாலத்தில் யுத்தநிறுத்தம் மீறப்படவில்லை!

## கருணாசேன கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புக்களின் வெற்றிதோல்விகளை காலம்தான் தீர்மானிக்கும் என, கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

யுத்தநிறுத்தம் மூலம் பெறப்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து, முன்னெடுத்துச் செல்வது அத்தியாவசியமானதாகும். கடந்த 19 மாத யுத்த நிறுத்த காலத்தில் - ஓரிரு சம்பவங்கள் இடம்பெற்றபோதும், யுத்தநிறுத்தம் மீறப்படவில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சமாதான தினத்தை யொட்டி, நேற்றுக் கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# இலங்கையில் எண்ணெய் வள ஆய்வு; அரசாங்கத்தால் திட்டங்கள் தயாரிப்பு!

## பிரதமர் ரணில் கட்டாரில் தெரிவிப்பு



இலங்கையில் உள்ள எண்ணெய் வளங்கள் குறித்து, ஆய்வுகளை நடத்துவதற்கான திட்டங்களை - தமது அரசாங்கம் தயாரித்து வருவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்டாருக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில், கட்டார் அரசின் மன்னருடனான சந்திப்பின்போது, எண்ணெய் வளங்கள் குறித்து - ஆராய்ச்சி செய்யும் அரசின் திட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பும் வழியில் பிரதமர் கட்டாருக்கு விஜயம் செய்து, அந்த நாட்டு மன்னரையும் பிரதமரையும் சந்தித்து உரையாடினார்.

நாட்டின் எண்ணெய் வளங்கள் குறித்து, ஆய்வு நடத்தும்போது எண்ணெய் அகழ்வில் அனுபவமுள்ள கட்டாரின் உதவியை பிரதமர் கோரினார்.

அதற்கு கட்டார் மன்னர் உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊழியர்கள் மீதான கெடுபிடிகள்; அரசாங்கம் உடன் நிறுத்தவேண்டும்

(கொழும்பு)

அரச ஊழியர் மீது அடக்குமுறையை மேற்கொள்வதை, அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெஹிவளையில் நேற்று இடம்பெற்று கூட்டமொன்றில் உரையாற்றியபோதே, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் பொறுப்பை உணராமல், அரச ஊழியர்கள் மீது குற்றஞ் சாட்டுவது தவறாகும். ஊழியர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு தொழிற்சங்க உரிமை இருக்கவேண்டும். ஊழியர்கள் தமது பிரச்சினையை முன்வைக்கும்போது, அதற்குத் தீர்வு பெற்றுக்கொள்வது அரசாங்கத்தின் கடமையென, எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.




மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் அலை வார இதழின் ஆய்வரங்கில், ஊடகவியலாளர்கள் - டி.சிவராம், துரைரட்ணம் மற்றும் சட்டத்தரணி தம்பையா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# கொக்கட்டிச்சோலையில் நெற்செய்கை முஸ்லிம்களுக்குப் புலிகள் அனுமதி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலையிலுள்ள - காததான்குடி முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல்நிலங்களில் - முஸ்லிம்கள் மீண்டும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்-முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக, ஆராயும் மட்டக்களப்பு வலயத்துக்கான உபகுழுவின் முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வைத்தே, தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்கான அனுமதியை வழங்கினர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியற்துறைப் பணிமனையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - விடுதலைப் புலிகளின் சார்பில் சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிதிப்பொறுப்பாளர் புவனேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில்- வடக்கு - கிழக்கு சமாதானத்துக்கான முஸ்லிம் பேரவையின் தலைவர் அப்துல் ஜபார் தலைமையிலான குழுவினர் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# கிண்ணியா பிரதேச செயலகத்தில் பொலிஸாரின் நடமாடும்சேவை

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலகத்திலுள்ள அல் அக்ஷா வித்தியாலயத்தில், நேற்று முன்தினம் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது.

திருமலை சீனன்குடா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடமாடும் சேவையில் - மக்களிடமிருந்து காணிப் பிரச்சினைகள், எல்லைப் பிரச்சினைகள் போன்ற முறைப்பாடுகள் பொலிஸாரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன், வாகன அனுமதிப் பத்திரம், வீதி ஒழுங்குகள் சம்பந்தமான விளக்கங்களும் - பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டது. (04)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு சந்திரிகா திட்டம்!

## கொழும்புப் பத்திரிகை தெரிவிப்பு

இணைந்துள்ள வடக்கு -கிழக்கு மாகாணத்தை, இரண்டு மாகாண அலகுகளாகப் பிரிப்பது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா சட்டவல்லுநர்களுடன் கடந்தவாரம் மந்திராலோசனை நடத்தியதாக, கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரித்து, தனித்தனியான ஆளுநர்களை நியமிப்பது தொடர்பாகவே, ஜனாதிபதி கவனம் செலுத்தி வருகிறார்.

1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, வடக்கு-கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டது. அவை தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமானால், அந்த மாகாணங்களில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என, அரசியல் அமைப்பின் 42 ஆவது பிரிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 15 வருடங்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல், இணைந்த மாகாணங்களாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதியுடன், வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனி அலகுகளாக பிரிக்கப்படவேண்டும். இல்லையெனில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இந்தநிலையில், வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தொடர்ந்தும் இணைத்து வைப்பதா? அல்லது அவற்றை தனித்தனி அலகுகளாக பிரிப்பதா என்பது பற்றி ஜனாதிபதி - சட்ட வல்லுநர்களை அழைத்து ஆராய்ந்துள்ளபோதிலும், அவை எந்த முடிவுகளும் எட்டப்படாத நிலையில், அந்த மாநாடு முடிவடைந்துள்ளது. (01)

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்; சர்வதேசத்திற்கு எடுத்துரைப்போம்

## வவுனியா பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு தெரிவிப்பு

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைத்து தமிழ்மக்களின் அபிலாஷைகளான - சுயநிர்ணய உரிமை, தனித் தேசியம், மரபுவழித் தாயகம் என்பவற்றை அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தி நடைபெறவுள்ளது.

தமிழ்மக்களின் உணர்வாக 'பொங்கு தமிழ்' மூலம் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவோம்.

இவ்வாறு- எதிர்வரும் 24 ஆம் திகதி வவுனியா- நகரசபை முற்றத்தில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரியவருவதாவது-

தமிழ்மக்களின் உரிமைக்கான போராட்டம், பயங்கரவாதப் போராட்டம், விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள், தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள், அவர்களை அழித்து தமிழ்மக்களைக் காப்பாற்றப்போவதாக பொய்ப்பிரசாரங்களைச் செய்துவருகின்றது.

தமிழ்மக்களுக்கெதிராக, சந்திரிகா அரசு - யுத்தம் நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியானது சர்வதேச சமூகத்துக்கு - தமிழ்மக்களது உரிமைகள் மறுக்கப்பட்டு - தமிழர் தாயகப் பிரதேசங்களிலேயே தமிழ்மக்கள் இராணுவத்தினரால் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது.

இதன்மூலம் ஏற்பட்ட சர்வதேச அழுத்தம் காரணமாக, யுத்தம் நிறுத்தப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கையிலும், பேச்சுக்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால், தமிழ்மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படுத்தப்படாது போனது. அத்துடன், தமிழர் தாயகப் பிரதேசத்தில் அபிவிருத்தியும் சாத்தியமற்றுப் போனது. இதன் காரணமாக மக்களது - விருப்புகள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலையில், பேச்சுக்களில் கலந்துகொள்வதில் பயனில்லையென விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டனர்.

தமிழ்மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படாமைக்குக் காரணம், மக்களது வாழ்விடங்களில் இராணுவம் நிலைகொண்டிருப்பதாகும். இராணுவம் தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காகவே - தமிழர் தாயகப் பிரதேசத்தில் மக்கள் வாழ்விடங்களில் நிலைகொண்டிருப்பதாக அரசு, உலகுக்குக்கூறி ஏமாற்றிவருகிறது.

இந்த நிலையில் மக்கள் மௌனமாக இருக்காது, அனைவரும் அணிதிரண்டு - தாயகப் பிரதேசத்தில் தங்கியுள்ள இராணுவம், தாயகப் பிரதேசத்திலிருந்து வெளியேறி- இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்தப் 'பொங்கு தமிழ்' நிகழ்வு தமிழ்மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் நிகழ்வேயன்றி, சிங்கள மக்களுக்கு எதிராகவோ, அவர்களது உரிமைகளையோ, கௌரவத்தையோ பாதிக்கும் வகையிலோ ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வு அல்ல. இதனைத் தடுப்பதற்கு இராணுவத்தினருக்கோ, பொலிஸாருக்கோ அதிகாரமில்லை.

'பொங்கு தமிழ்' நிகழ்வில் இராணுவத்தினரதோ வேறு சக்திகளினதோ தலையீடுயின்றி அமைதியாகவும், வன்முறைகள் இன்றியும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள், கண்காணிப்புக் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் எதுவித அச்சமுமின்றிக் கலந்துகொண்டு, நிகழ்வின் வெற்றிக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.வரும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவேண்டும்

## சனசமூகநிலைய நிர்வாகிகளுடனான கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீள்குடியேற்றங்கள் தொடர்பாக ஆராயவரும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள், அரசியல் தலைவர்கள்- யாழ். செயலகத்தில் மட்டும் மாநாடுகளை நடத்திச்செல்வதை மாற்றி, மக்களின பிரதிநிதிகளான சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து, உண்மைநிலையை அறிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு வலிகாமம் கோட்ட சனசமூகநிலைய நிர்வாகிகளுடனான கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற, விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் - நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கும் நிதிகளை உரிய கட்டமைப்புகள் ஊடாக ஒதுக்காது, தங்கள் வாக்கு வங்கியினை நிரப்பும் நோக்கில் ஒதுக்குவதை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

குடாநாட்டில் வீதி விபத்துகள் அதிகரித்து வருகின்றன. அதற்கான காரணங்களில் ஒன்று - குடாநாட்டின் வீதிகளின் அகலங்கள் சுருங்கி வருவதாகும். இதனை ஒழுங்குபடுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தவேண்டும்.

யாழ். குடாநாட்டினுள் உள்நுழைந்துள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள்- முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தாம் நினைத்தபடி வேறு வேறான பயிற்சிகளை அளிக்கின்றன. இந்தப் பயிற்சிகள் ஒருமுகப்படுத்தப்பட்டு, சமுதாயத்துக்குப் பயனுள்ளதாக்கப்படுவதோடு, பணியாற்றிவரும் முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனத்தையும் சீராக்கச் சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வரவேண்டும்.

சமூகத்துக்காகத் தொண்டாற்றுகின்ற சனசமூக நிலைய நிர்வாகிகள்- பொது வேலைத்திட்டத்துக்காக அரச திணைக்களங்களை நாடும்போது, அரச உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவர்களுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

தமது பிரதேசங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமுதாய சீரழிவுகளைச் சரிசெய்து ஒழுங்குபடுத்த, அப்பகுதி சனசமூக நிலையங்கள் முன்வந்து பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கமுடியாது. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில், இடம் பெயர்ந்து வாழும் மக்கள் - தம் சொந்த இடங்களுக்குச் செல்ல வழி சமைக்கவேண்டும்.

மக்களை நேசித்து, மக்கள் பிரச்சினையை விளங்கிக்கொண்டு, மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களாகிய விடுதலைப் புலிகளின் கைகளில், வலுவான இடைக்கால நிர்வாகத்தை உடன் கையளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

கிராமந்தோறும் சமூகத் தொண்டர்களை உருவாக்கும் பயிற்சிகளும், தலைமைத்துவ பயிற்சிகளும் வழங்குவதற்கு அனைத்து சனசமூக நிலையங்களும் ஒத்துழைக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் இச்சந்திப்பின் போது எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கான கல்விச் செயலமர்வுகள் இன்று முதல்!

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான கல்விச் செயலமர்வுகள் இன்று தொடக்கம் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. இச்செயலமர்வுகளில் - தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் - தமிழ், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளவேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

வரணி ஆசிரியர் நிலையத்திலேயே இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் செயலமர்விற்கு வரும்போது பாடப்புத்தகங்களையும், பாடசாலை அடிப்படையிலான வேலைத் திட்டங்களையும் கொண்டு வரும்படி ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மூன்றாம் தவணைக்கான சேவைக்கால செயலமர்வுகள் எதிர்வரும் 27 ஆம், 29 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் தகவல் தொழில்நுட்பத் திறன்கள், வாழ்க்கைத் தேர்ச்சி தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடல்களில் ஆசிரியர்கள் கலந்துகொள்வதை, அதிபர்கள் உறுதிப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (29)



வலி.வடக்கு பிரதேச சனசமூகநிலைய பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிகாமக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் உரையாற்றுவதையும், கலாநிதி. சூசை ஆனந்தன், அரசியற்துறையைச் சேர்ந்த பாலையா, வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன், வலிகாமக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சாம்பசிவம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

# நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்தோருக்கு யு.என்.எச்.சி.ஆர். வீடு கட்டுவதற்கு உதவி

நாகர்கோவில் - அம்பன் கொட்டோடை பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து, குடத்தனையில் வசிக்கும் 60 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாகர்கோவில் கிழக்கு, மேற்கு, தெற்கு, அம்பன், கொட்டோடை பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து குடத்தனை, குடத்தனை வடக்கு பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும், குடத்தனையிலிருந்து இடம் பெயர்ந்து வன்னிக்குச் சென்று திரும்பிய 11 குடும்பங்களுக்கும் இந்த வீடுகளை யு.என்.எச்.சி.ஆர். கட்டிகொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

குடத்தனை, குடத்தனை வடக்கு பகுதிகளுக்கு 60 வீடுகளும், குடத்தனையில் 5 பொது மலசலகூடங்களும், குடத்தனை வடக்கிற்கு 3 பொது மலசலகூடங்களும், குடத்தனையில் 3 பொதுக் கிணறுகளும் கட்டிகொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தனியார் வீடுகளில், அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்கிறார்கள் என்பதால், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையின் முயற்சியிலேயே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# தபால் தொலைத்தொடர்புகள் சங்கத்தின் கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிப்பு!

(யாழ்ப்பாணம்)

இந்தவருடம் நடைபெறவுள்ள ஆண்டுப் பொதுக்கூட்டத்தில், பிரதேச தபால் தொலைத் தொடர்புகள் சேவையாளர் சங்கம் - தன்னுடையதும், தன் அங்கத்தவர்களினதுமான பின்வரும் கோரிக்கைக்களை நடைமுறைப்படுத்தக்கோரி பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அநேகமான அஞ்சல் அலுவலகங்களும் 2 மணிக்கும் 2.30 மணிக்குமிடையில் தமது நாளாந்த தபால் பைகளை மூடுவதுடன், 4.30 மணியுடன் தமது இயக்கத்தை நிறுத்திக் கொள்கின்றன. ஆயினும், அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள உப அஞ்சல அலுவலகங்கள் தமது வேலைகளை பி.ப. 5 மணிவரை நடத்துகின்றன. எனவே, இந்த நடைமுறைகள் மாற்றப்பட்டு, அஞ்சல் அலுவலகங்கள் அனைத்தும் மு.ப 7 மணிமுதல் பி.ப. 6 மணிவரை பொதுமக்கள் தேவைகளுக்காகத் திறக்கப்பட்டிருத்தல்வேண்டும். யாழ்ப்பாணப் பிராந்திய, தபால் தரம் பிரிக்கும் நிலையம் பி.ப 9 மணிவரை திறந்து தபால் வேலைகள் கவனிக்கப்படல் வேண்டும். ஏனைய அஞ்சல் அலுவலகங்களின் தபால் பைகள் பி.ப 4 மணிக்குப் பின்னரே மூடப்படுதல் வேண்டும்.

கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் மு.ப. 7 மணிமுதல் பி.ப 7 மணிவரை பொது மக்கள் மற்றும் தபால் சேவைகளுக்காகத் திறக்கப்படல் வேண்டும்.

எல்லா அஞ்சல் திணைக்களக் கடமைகளுக்கும் ஒவ்வொரு வெற்றிடமும், அது எந்தவகையினதாக இருப்பினும், நான்கு மணி நேரத்திற்குக் குறையாத மேலதிக நேரக் கொடுப்பனவினால் ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

நீண்ட காலமாக வட பகுதித் தபாலகங்களுக்கு தளபாடங்கள் வழங்கப்படவில்லை. அஞ்சல் அதிபர்களின் கோரிக்கைகளின் படி, அவற்றினைத் துரிதமாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம் - தனது வீதித் தபால்பெட்டி கடிதச் சேகரிப்புக்களை பி.ப 4 மணிக்குப் பின்னர், மோட்டார் வாகனமொன்றின் மூலமாகச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

அண்மையில் திறக்கப்படவுள்ள யாழ். அஞ்சல் வளாகத்தினில் முழுமையானதொரு நவீன அஞ்சல் பயிற்சி நிலையத்தினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

புதிய கட்டடத்தில் - விரைவில் குடிபுகவுள்ள அஞ்சல் அலுவலகத்தின் பாவனைக்காகப் புதிய தளபாடங்கள் வழங்கப்படல்வேண்டும்.

அஞ்சல் திணைக்கள அலுவலர்களிடையே காணப்படும் வேதன முரண்பாடுகள் நீக்கப்பட்டு, அவர்களின் முதுநிலை, தரம் என்பவற்றுக்கமைய வேதன நிலைகள் வகைப் படுத்தப்படல்வேண்டும்.

புதிய அஞ்சல் வளாகத்தினுள் சிற்றுண்டிச்சாலைக்கான இடமொன்று ஒதுக்கப்படவில்லை. இந்தக் குறைகளையப்படுவதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

தமது பதவிகளில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள சிற்றூழியர்கள் மற்றும் உப அஞ்சல் அதிபர்கள் - ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தொகுதி தரம் I, ஆ தரப் பதவிகளுக்கு நியமிக்கப்படும் அலுவலர்களை, மீண்டும் ஒரு தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப் படுவதை நிறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் போன்ற பிரேரணைகளே முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கடற்தொழிலாளர் தினவிழா அடுத்தமாதம் 16 ஆம் திகதி

உலக உணவு தினத்தை- கடற்தொழிலாளர் தினமாகக் கொண்டாட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளைக் கடற்தொழில அமைச்சு எடுத்துள்ளது.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி கடற்தொழிலாளர் தினவிழா- பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடற்தொழிலாளர்கள், கலந்துகொள்ளவுள்ளனர்.

மாவட்டங்கள் தோறும் கடற்தொழிலாளர்களைத் தெரிவு செய்து, அனுப்பிவைக்குமாறு கடற தொழில திணைக்களம் - மாவட்ட கடற்தொழில் உதவிப் பணிப்பாளர்களை கேட்டுள்ளது.

அதேவேளை, யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்களின் அதிருப்தியை வெளிபபடுத்தும் முகமாக யாழ். மாவட்டத்திலிருந்து கடற்தொழிலாளர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (17)

# பழுதடைந்த நிலையிலுள்ள குழாய்க் கிணறுகள்

பருத்தித்துறை பிரதேசசபைக்குச் சொந்தமான மந்திகை ஆலடிச்சந்தையிலுள்ள குழாய்க்கிணறு, கடந்த ஆறு மாதகாலத்திற்குமேல் பழுதடைந்த நிலையிலேயேயுள்ளது. இதனால் வியாபாரிகளும், பொதுமக்களும் குடிநீர் இன்றி சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீண்டகாலமாகவே இந்தக் குழாய்க் கிணறு திருத்தப்படாததையிட்டு பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று, பருத்தித்துறை பிரதேசசபைக்குச் சொந்தமான மந்திகையிலுள்ள பொதுநூலகக் குழாய்க்கிணறும் பழுதடைந்தநிலையில் உள்ளது. பொதுநூல் நிலையவளவிற்குள், ஆயுர்வேத வைத்தியசாலையும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இங்கு சிகிச்சைக்காகவரும் நோயாளர்களும், குடிநீர் இன்றிச் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழாய் கிணறுகளைத் திருத்தித் தருமாறு பொதுமக்கள் சார்பில் பிரதேசசபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(17)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்

பெயர் : க.தயா
முகவரி : பிரான்பற்று, பண்டத்தரிப்பு.



ஏழாவது அகவையில்



பெயர் : பி.ராகவி
முகவரி : கனடா.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றார் ஒப்ப..

# செவ்வாய் கிரகமும் தண்ணீரும்



கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து, செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருக்கின்றதா என்ற ஆராய்ச்சி - அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமாகிய நாஸாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்கே இருக்கின்ற சிறு குன்றுகளில்கூட ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. ஆனால், முயற்சிகள் பெரும்பாலும் தோல்விகளில் முடிவடைந்தன. ஆனாலும், அங்கு எடுக்கப்பட்ட புவியியல் ரீதியான சான்றுகளின் பரிசோதனைகளின்படி, நீர்க்கனிமப் படிவுகள் இருப்பது போன்றே தெரிகின்றது. தற்போது நாஸாவினால் அனுப்பப்பட்ட பீகிள் - 2 என்ற விண்வெளி ஓடம்- அதனுடைய ஸ்டிரியோ கமராக்கருவி மூலம்,



மனிதனால் செய்யமுடியாத பலதரப்பட்ட செயற்பாடுகளைச் **செவ்வாய் கிரகத்தில்** செய்து கொண்டிருக்கின்றது. இதற்குப் போட்டியாகக் கடந்த டிசம்பர் மாதத்தில் ஐரோப்பிய விண்வெளி ஸ்தாபனத்தினரால் அனுப்பப்பட்ட விண்வெளி ஓடமும், தன்பணியைச் செவ்வனவே செய்து கொண்டிருக்கின்றது. உண்மையில் ஸ்டிரியோ கமராவானது - இயந்திர மனிதர்கள் மூலம் இயங்கக்கூடியது. இது செவ்வாய்கிரகத்தில் காணப்படுகின்ற செந்நிற ஒளியை ஊடுருவிப் படம் எடுக்கக்கூடியது. தற்போது ஆராய்ச்சி செய்யப்படுகின்ற இடம் - 144km x 106km பரப்பாகும். இக்கமரா மூலம் எடுக்கப்பட்ட தரைத்தோற்ற அமசங்களுக்கான ஆராய்ச்சிகள தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆனால், இரும்புப் படிவுகள் மற்றும் பக்றீரியா என்பனவும், அங்கு இருப்பதாகக் கருதப்படுகின்றது. டிசம்பர் 20 ஆம் திகதியளவில் ஓரளவு நம்பிக்கை பெறப்படலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால், இதையெல்லாம் ஜப்பான் நாட்டின் நலோமி துணைக்கோள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு வருகின்றது. ஏட்டிக்குப்போட்டி செவ்வாய்க்கிரகத்திலுமா?



# AOL.COM




உலகையே தன்செயற்பாடுகளினால் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இணையத்தளத்தின் புதிய புரட்சி மூலம், ஒருவகையான வெப்தளம் ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால், இதற்கு முதல் இருந்த TWX வெப்தளத்துக்குப் போட்டியாக இது வந்திருக்கின்றது. இதனுடைய பெயர் AOL. தற்போது நியூயோர்க் பங்குச்சந்தையின் வெப்தளமான TWX உள்ளது. ஆனால், வெகுவிரைவில் அது தள்ளப்பட்டு, அதனுடைய இடத்துக்கு AOL வரும் எனக் கூறப்படுகின்றது. இதன் மூலம் ஒரேதளத்தில் பலதரப்பட்ட தகவல்களைப் பெறமுடியும். ஆனால், இதற்குப் போட்டியாக ஏதேனும் ஒரு வெப்தளம் வரும் எனவும் அஞ்சப்படுகின்றது. இந்த வெப்தளத்துக்கு 35 மில்லியன் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த வெப்தளம் சகலவிதமான எதிர்ப்புக்களையும் சமாளிக்கவல்லது எனக் கூறப்படுகின்றது. உலகத்தின் தலைசிறந்த மூன்று இணையத்தளச் சேவைகளினூடு பெறப்படுவதால், எதிர்காலத்தில் இது சந்தையை விட்டுச் செல்லாது என்பது நிச்சயம். இதிலுள்ள முக்கிய குறைபாடு. என்னவெனின், இதற்கு நிச்சயமான, பொருத்தமான முகாமைத்துவக் கட்டமைப்பு இல்லாமை. இதற்குப் போட்டிக் கம்பனிகளாக - அமேசன், ஈபே, லாஸ்ட்மினிற் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

AOL இன் வெற்றிக்கு உடனடித்தேவை - திறமையான அலுவலகக் கட்டமைப்பு ஆகும். அதனைவிட - நல்ல பயிற்சி, பாதுகாப்பு, வாடிக்கையாளர்களைக் கவருதல் போன்றனவும் AOL இன் எதிர்காலத்துக்குத் தேவையானவை ஆகும்.

# சீனா விண்வெளிக்குள் நுழைகிறது

ஐரோப்பிய யூனியன், விண்வெளி வலையமைப்பில் நுழைவதற்குத் தயக்கம்காட்டிய சீனா, இப்போது அதிலே அங்கத்துவம் பெற்றிருக்கின்றது. சீனா - விண்வெளி ஆராய்ச்சிகளில் சத்தம் போடாமல் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் ஒரு நாடு. சீனாவின் முதலாவது விண்வெளி ஓடம், அடுத்த மாதமளவில் விண்வெளிக்குச் செல்லவிருக்கின்றது. இதற்காக, இந்தநாடு 230 மில்லியன் யூரோக்களைச் செலவு செய்துவருகின்றது. சீனா, இந்த வலையமைப்பில் நுழையாததற்குக் காரணம்- இது அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமாகவுள்ள பென்ரகனுக்கு விசுவாசமாக நடப்பதாலாகும். பிஜீங் பல்கலைக்கழக வளாகத்தில், ஐரோப்பிய விண்வெளி ஸ்தாபனமும் - சீனாவின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து, ஒரு விண்வெளி ஆய்வுகூடத்தினை ஏற்படுத்தியிருக்கின்றன. செய்மதிகள் அனுப்புதல், விண்வெளித் தொழில் நுட்பம் போன்ற விடயங்களில் - பரஸ்பரம் இரண்டு அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கும். சீனா, செய்மதிகள் மூலம் தனது நாட்டின் உள்துறை மற்றும் பாதுகாப்பு விடயத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. ராடர் கருவிகளிலும் பார்க்க, செய்மதிகள் மிகவும் துல்லியமாகச் சில விடயங்களை எடுத்துக் காட்டுகின்றன.






# விஞ்ஞானம் பரீட்சைக்கு மட்டுமல்ல

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு விஞ்ஞானத்தினை ஒரு பரீட்சை என்றரீதியில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது, விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் ஆங்கே இல்லாமல் போகின்றது. இதற்கு முக்கிய காரணம் - ஆரம்பக்கல்வி விஞ்ஞானம் கடினமானவையாக இருப்பதும், மற்றும் அதற்குரிய விசேட ஆசிரியர்கள் இல்லாமையும் ஆகும். உண்மையில் விஞ்ஞான பாடத்துக்குக் கூடுதலானவை - அவதானிப்புக்களும், பரிசோதனைகளும் வைத்தே ஆதல் வேண்டும். இது மாணவர்களின் விஞ்ஞானக் கற்றலில் உள்ள தூண்டுதலைக் கூட்டும். ஆரம்பக்கல்வி வகுப்பு மாணவர்களுக்குச் சில விஞ்ஞான தத்துவங்களை எந்தளவுக்குப் புகுத்தமுடியும் என்று, ஆசிரியர்கள் மட்டத்தில் காணப்படுகின்ற பெரும் குழப்பமாகும். சிலவேளைகளில், மாணவர்கள் ஆரம்பக்கல்வியில் கற்ற விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கும், இரண்டாம்நிலைக் கல்வியில் கற்கின்ற சில விஞ்ஞான தத்துவங்களுக்குமிடையே குழப்பங்கள் வருகின்றபோது, மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இதற்குரிய மூல காரணம் - ஆரம்பவிஞ்ஞான ஆசிரியர்கள் விசேட தராதரமற்றவர்களாக இருப்பதாகும். பாடத்தை விளங்கிக்கொள்ளாமலேயே, மாணவர்கள் பரீட்சைக்கு விடையெழுதி, நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அதற்குக் காரணம், அவர்களுடைய பாடமாக்கும் திறன். இதனைக் களையும் நோக்குடன், இங்கிலாந்தில் ஆசிரியர்கள் அனைவருக்கும் விஞ்ஞான அறிவைப் புகட்டும் நோக்குடன், சில வேலைப்பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. 1000 இக்கும் மேற்பட்ட மாணவர்களுடைய கேள்வி- 'விஞ்ஞானத்தில் என்ன இருக்கின்றது'. சும்மா பூவின் பகுதிகள் மற்றும் சில பெயர்கள்தானே. இந்த மனோநிலை களையப்படவேண்டும் என்பதில், இங்கிலாந்தின் கல்வித் திணைக்களம் குறியாக இருக்கின்றது. அதற்கான மூல ஏற்பாடாக - பிள்ளைகள் மத்தியில் பரிசோதிக்கும் திறன்களை வளர்ப்பதற்காகச் சிலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# இன்ரநெற் மோகம்

இன்ரநெற்றின் பயன்பாடு மூலைமுடுக்கெங்கிலும் பரவிக்காணப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், உலகின் 59 சதவீதமான மக்கள் ஒவ்வொரு நாளும் இணையத்தளத்தைப் பாவிக்கின்றார்கள் என்ற தகவல் ஆச்சரியம் தருவதாக உள்ளது. அண்மையில் பாவனைக்கு வந்திருக்கின்ற டிஜிட்டல் இன்ரநெற் சேவையின் மூலம், அதிவிரைவாக மக்கள் - சேவையைப் பெறக்கூடியதாக உள்ளது. 2005 ஆம் ஆண்டில், இன்ரநெற் உலகம் அதியுன்னத நிலையை அடைந்தாலும் ஆச்சரியத்துக்கில்லை என்கின்றார், ஒக்ஸ்போட் இன்ரநெற் நிலையப் பேராசிரியர் ஒருவர். அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் படி, 22 சதவீதமான ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும், 67 சதவீதமான வேலையிலுள்ளவர்களும் அதிகமாக இன்ரநெற்றினைப் பாவிக்கின்றார்கள். ஆனாலும், 20 சதவீதமான மக்கள் - இன்ரநெற் பற்றிய அக்கறையே இல்லாது வாழ்கின்றார்கள். உலகிலேயே அதிகூடிய இன்ரநெற் பாவனையாளர்கள் இருக்கின்ற நாடு-அமெரிக்கா அடுத்ததாக தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன. இது வருடா வருடம் அதிகரிக்கின்றதே ஒழிய, குறைவதாகவில்லை.



# யூபிற்றர் கோள் பற்றி



அமெரிக்க விண்வெளி நிறுவனம் நாஸா - யூபிற்றர் கோளில் செய்து வந்த ஆராய்ச்சி முடிவுக்கு வந்திருக்கின்றது. கலிலியோ விண்வெளி ஓடம் பல மாதகாலமாக யூபிற்றர் கோளில் தரையிறக்கப்பட்டு, தொடர்ச்சியான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்தது. அதிகூடிய வெப்பம் மற்றும் சடுதியான - அமுக்கம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இந்தக் கோளில் பெருமளவு சல்பர் படிவுகள் காணப்படுகின்றன. கலிலியோ விண்வெளி ஓடம் மூலம், ஒவ்வொரு நாளும் யூபிற்றர் பற்றிய தகவல்கள் நாஸாவுக்குக் கிடைத்தவண்ணம் இருந்தன. 14 வருடங்களாக இது ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டு வந்தது. விண்வெளித் தகவல்களின்படி - யூபிற்றரில் எரிமலைகளும் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.



அங்கே காணப்படுகின்ற பனிக்கட்டிகள் - மிகவும் இறுக்கமானவையாகவும், உருகுநிலை குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. சுழிக்காற்றுக்கள், தூசுப்படைகள் எல்லாம் காலநிலை மாற்றங்களுக்குட்படுகின்றன. இப்படி எல்லாம் இருந்தாலும், சடுதியாக அதிகரிக்கும் வெப்பநிலை இந்தக் கோளின் சீரற்ற தன்மையாகும்.



# பிளாஸ்டிக் ஒழிக



உலகளாவியரீதியில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை ஒழிக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான ஒரு முயற்சியாக பிளாஸ்டிக்குக்கு ஈடான பொருட்கள் தற்போது பாவிக்கப்பட்டு வருகின்றன.

தாள்கள், அலுமினியம், கண்ணாடி, துணி, தோல் போன்ற பொருட்களால் சூழல் மாசடையாது. இவற்றினுடைய கழிவு பிளாஸ்டிக்போல அவ்வளவாகப் பாதிப்பினைத் தராது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வருடாந்த சுத்தம் பற்றிய கருத்தரங்கு - அடுத்த வாரம் நடைபெற இருக்கிறது. அதிலே ஒலிக்கப் போகும் குரல் "பொலித்தீனை ஒழிப்போம்" பிளாஸ்டிக்கை மீளப் பாவிக்கும்படி அறிவுறுத்தினாலும், அது சாத்தியமாவதில்லை.

தற்போது கூடுதலான நாடுகளில் உணவுகள் யாவும் சாதாரண தாள்களிலேயே அடைக்கப்படுகின்றன. ஆனால், மக்கள் பிளாஸ்டிக் பொருட்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளேயே விரும்பி வாங்குகிறார்கள்.

ஏனெனில், அவை பாதுகாப்பு அதிகமுள்ளனவாகக் காணப்படுகின்றன. சுவிற்ஸர்லாந்து நாட்டில் பிளாஸ்டிக் போத்தல்கள் மீளப்பெறப்படுகின்றன. இதன் காரணமாக அங்கு பிளாஸ்ரிக் உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

ஜப்பானின் ரோக்கியோ நகரத்தில், நாளாந்தம் பிளாஸ்டிக் பொருட்கள் சுத்தம் செய்யப்படுகின்றன. ஜேர்மனி - பிளாஸ்டிக் உற்பத்தியைவிட்டு, போத்தல்களுக்கு அண்மையில் மாறியிருக்கிறது.

அயர்லாந்தில் பிளாஸ்டிக்கின் விலை வேண்டுமென்றே உயர்த்தப்பட்டிருக்கின்றது. எது எப்படியிருந்தாலும், பிளாஸ்டிக்கின் மீது மக்களின் மோகம் குறையவேயில்லை.

# நிலத்தில் படரும் தாவரங்கள்



படரும் தாவரங்கள் பூமிக்குக் கிட்டத்தட்ட 475 மில்லியன் வருடங்களுக்கு முன்பே வந்துவிட்டன. ஏன் தாவரங்கள் நிலத்தில் படருகின்றன. இதில் என்ன அதிசயம் என்றால், ஓமான் போன்ற பாலைவன நாடுகளிலும் இப்படியான படரிகள் காணப்படுகின்றன.

ஓமானில் காணப்படுகின்ற குளிர்மலைகள் அல்லது பச்சை மலைகளே இதற்கு முக்கிய காரணம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

அங்கே காணப்படுகின்ற ஒருவகையான கவர்ச்சி விசை - தாவரங்களை கீழ்நோக்கி இழுப்பதாகக் கருதப்படுகின்றது. ஆனால், இதேவகையான தாவரங்கள் நீருக்கடியில் முளைக்கும்போது, நிமிர்ந்து நிற்கின்றன. அதற்குக் காரணம் நீரின் மேற்பரப்பு இழுவிசை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

ஓமானின் பச்சை மலைகளில் இந்தத் தாவரங்கள் கிட்டத்தட்ட 443-489 மில்லியன் வருடங்களுக்கு முன்பே இருந்திருக்கின்றன. இந்தத் தாவரங்களை நிமிர்ந்து நிற்கவைக்க முடியுமா? ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

# இராட்சத எலி



வெனிசுலா நாட்டில் இராட்சத எலிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 700kg எடைகொண்டதும், புற்களுக்கிடையே வாழ்வதுமான ஒரு வகையான இராட்சத எருமை- கரீபியன் கடற்கரைப் பக்கமாக, 8 மில்லியன் வருடங்களுக்கு முதல் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. அதேபோலத்தான் இதுவும் காணப்படுகிறது. இதனுடைய பெயர் குயின் ஸில்லா என்பதாகும். ஆனால், தற்போது காணப்படுகின்ற இராட்சத எலியாக- 50kg நிறைகொண்ட கப்பிபாரா காணப்படுகிறது. இதனுடைய பற்கள்- புற்களை அரைக்கக்கூடிய வகையில் விருத்தியடைந்து காணப்படுகின்றன. அடுத்ததாகக் காணப்படுவது- 1kg எடைகொண்ட குயின் பிக். இது 2000 ஆண்டளவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இது கூடுதலாக அமேசன் நதியை அண்டிய பிரதேசங்களில் காணப்படுகின்றது. இராட்சத எலிகளுக்கு ஒத்த சிங்கம் அளவு பூனைகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவற்றில் 2000 இனங்கள் காணப்படுகின்றன. அதில் 40% முலையூட்டிகளாகக் காணப்படுகின்றன. ஆனால், இவை கூடுதலாகத் தென்னமரிக்காவில்தான் காணப்படுகின்றன.

# மைக்கிறோ சொவ்ட்-ராஜாதான்




உலகின் தலைசிறந்த கணினி மென்பொருள் நிறுவனமாகிய மைக்கிறோ சொவ்ட் நிறுவனத்திடமிருந்து, கணினி யன்னல்களைத் தாக்குகின்ற வைரஸ் அழிப்பு நிகழ்ச்சி ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

வைரஸ்கள் ஒரு கணினியை ஈ-மெயில் **(e-mail)** மூலம் தாக்குவது தற்போது அதிகரித்து வரும் சூழ்நிலையில் - இந்த அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஈ-மெயில் அனுப்பும் போதோ அல்லது பெறும்போதோ சரி, இந்தப் பாதுகாப்பு நிகழ்ச்சியைச் சரிசெய்தால், வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபடலாம். 82 நாடுகள் இந்த முறையைப் பின்பற்றத் தொடங்கியிருக்கின்றன.

இதுவும் ஒருவகையான ஆன்டி வைரஸ்தான். இதன் பெயர் ஸ்னீக்கி. ஒவ்வொரு முறையும் இந்த வைரஸ் ஒவ்வொரு பைலினையும் பாதுகாக்கின்றது. தற்போது ஜிப் என்ற வைரஸ் உலகளாவியரீதியில் கணினிகளைப் பாதித்துக்கொண்டிருக்கின்றது. இதற்குரிய தொடக்கமாக **Support @ micro soft.com** உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் கணினிப் பாவனையாளர்கள் தம்முடைய வெப்சைட்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியவாறு இருக்கும்.

# திரை விமர்சனம்

## நாம்



**56** கோடியே, 63 இலட்சத்து 73 ஆயிரத்து 537 இளைஞர்களின் கனவுதான் **நாம்**!. சற்றே பெரிய கனவாகத்தான் இருக்கப்போகிறது என்று நிமிர்ந்து உட்கார்ந்தால், பளிச் சென்று போட்டு உடைக்கிறார்கள்... பணம் தான் அந்தக் கனவு. அந்த பணத்திற்காக நான்கு இளைஞர்களும் ஒரு யுவதியும் என்ன செய்கிறார்கள்? வழக்கமான பாணியில் சொல்லாமல், கொஞ்சம் வித்தியாசமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் சபா கைலாஷ்.

பிரபல தாதாவான பிரகாஷ்ராஜ்- வெளிநாட்டிற்குத் தப்பிச்செல்ல முயல்கிறார். அவரைத் தப்பிக்கவிடாமல் திடுக்கிடும்படி போடும் பொலிஸ்- பிரகாஷ்ராஜின் தம்பியைச் சுட்டுக் கொலவதுடன், பிரகாஷ்ராஜும் தபபிவிடுகிறார். வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்லத் தன் கிரிமினல் மூளையை உபயோகித்து, பிரகாஷ்ராஜ் திட்டம்போட, அவரையே கடத்தச் செலலத் திட்டம் போடுகிறது மேற்படி இளைஞர் கோஷ்டி.. அப்புறம் என்ன என்ற ஆர்வத்தை கிளப்பி, மிகுதிக் கதையை முடித்திருக்கிறார்கள்.

நான்கு இளைஞர்களின் அறிமுகம். சோடை போகாத நடிப்பு. அதிலும் கண்ணாடி போட்ட அந்த இளைஞரிடம் இயல்பை மீறாத நடிப்பு. பிரகாஷ்ராஜைக் கடத்தி வந்த பின், இவர்களின் அரைகுறைப் புத்திசாலித்தனத்தில் என்ன செய்வார்களோ என்ற பதட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாலு இளைஞர்களும், ஒரு பெண்ணும் இருந்தால் காதல், கத்தரிக்காய், டூயட் எல்லாமே இருக்கவேண்டுமே. இந்த சினிமா விதியை அப்பளமாக நறுக்கிறார் இயக்குநர் சபாஷ்.

இளவரசு சில காட்சிகளே வந்தாலும், கலகலக்க வைத்திருக்கிறார். நாயகன் பிரகாஷ்ராஜ்தான்! முரட்டுத் தாதாவான அவர் கைகள் கட்டப்பட்டிருக்கும் நிலையிலேயே, இளைஞர்களை மிரட்டி ஓடவைத்திருக்கிறார். பாத்திரத்துக்குக் கிடைத்த வெற்றி - முன்பல் தெரிய உப்பிய வயிற்றுடன் அவரின் புதுத்தோற்றம் மிரட்டுகிறது.

பொலிஸ் அதிகாரியாக கலாபவன் மணி. ஒரே பாணியில் நடந்து, வரவர எரிச்சல் மூட்டுகிறார். விமானிகளிடம் விசாரணை செய்யும் காட்சி. நகைச்சுவைக்கு என்றால் தப்பிவிடுவது. எரிச்சல் மூட்டும் இன்னொரு மனிதர் - மகாநதி ஷங்கர். அவ்வளவு முக்கியமான விடயத்திற்கு உள்ளூர் வாசியை அனுப்புகிறார்கள் நம்பமுடியவில்லை.

ஒளிப்பதிவு இயக்குநர் பன்னீர்ச் செல்வம் காட்சிக்குக்காட்சி கைதட்ட வைத்திருக்கிறார். கழுவிவைத்த கண்ணாடியின் அழகு ஒவ்வொரு காட்சியிலும்.

பொலிஸ் கமிஷனராக நடித்திருக்கும் தயாரிப்பாளர் ஞானவேல், புதுத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கலாம். பாடல்களுக்கோ, நகைச்சுவைக்கோ முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

56 கோடியே 63 லட்சத்து 73 ஆயிரத்து 537 இளைஞர்களின் கனவைச் சொல்லப் பணத்தை இறைத்திருக்கிறார்கள். திரும்ப எடுத்தால் சந்தோஷமே.

# நாஸாவின் 'ஒட்டிகள்'



பல மாதங்களாகச் செய்து முடிக்கப்பட்ட கடின ஆராய்ச்சிகளின் பின்பு, நாஸா விஞ்ஞான ஆய்வுகூடத்தின் அற்புதமான கண்டுபிடிப்பாக, ஒரு வகையான ஒட்டும் தன்மையுள்ள உரித்து ஒட்டக் கூடிய பொருள் ஒன்றினை, ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள். இது விண்வெளி ஓடங்களில் ஏற்படும் துவாரங்களை ஒட்டுவதற்குப் பயன்படக்கூடியது. இதில் என்ன சிறப்பம்சம் என்றால்- கடினவெப்பத்தினையும் தாங்கக்கூடியது. ஆனால், இந்த ஆராய்ச்சி நேற்று இன்று தொடங்கப்பட்டதல்ல. இது 25 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டுவருகிற ஆராய்ச்சி என்று விஞ்ஞானிகள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

அண்மையில் கொலம்பிய விண்வெளி ஓடத்தின் விபத்துக்குப் பின், வெப்பத்தினால் ஏற்படும் துவாரங்கள் நாஸாவிற்கு ஒரு சவாலாக விளங்கியது. ஆனால், இந்த ஒட்டியின் கண்டுபிடிப்பு, அவர்களுக்கு ஒரு மைல் கல்லாக விளங்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

சாதாரண வாகனம் போலல்ல விண்வெளி ஓடங்கள். வெப்பநிலை மாற்றங்கள்- விண்வெளி ஓடத்தின் போக்கில் பல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது. குறிப்பாக ஏதேனும் பழுது ஏற்பட்டால், அதனைச் சரிசெய்வது அதிலும் அண்ட வெளியில் வைத்துப் பழுது பார்ப்பது என்பது ஒரு சவாலான விடயம். சாதாரணமாக விண்வெளி ஓடங்களில் முற்புறத்திலேயே எரிபொருள் தாங்கி அமைகின்றது.

ஆனால், ஏதேனும் பாகங்களில் துவாரம் ஏற்படும் பொழுது முற்றுமுழுதாக இது வெடித்துச் சிதறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. துவாரங்கள் இருப்பதனை அறிந்தவுடன், உடனடியாக அது அடைக்கப்படுதல் வேண்டும். இதற்கு எந்தவிதமான ஆயுதங்களோ தேவையில்லை. அண்மைய கண்டுபிடிப்பான ஒட்டியே போதுமானது.

# யானை பாதுகாப்பு

விவசாயிகள் தம்முடைய விளைநிலங்களை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, அவற்றைக் கொல்லவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதிலும் ஆசிய நாட்டு யானைகள்தான் இப்படி அதிகமாக அழிகின்றன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அறிக்கையின்படி- ஒரு காலத்தில் நூறாயிரக்கணக்கான யானைகள் ஆசிய நாடுகளில் காணப்பட்டன. ஆனால், தற்போது 16000 மட்டுமே எஞ்சியிருக்கிறன. இந்தியாவில் ஒரு மனிதன், ஒரு யானை என்றரீதியில் நாளாந்த இறப்புவீதம் இருக்கிறது. ஒரு வயது வந்த யானையானது, நூற்றுக்கணக்கான சதுர அடிப்பரப்புள்ள பிரதேசத்தில் அலைந்து



திரியக்கூடியது. இதன் காரணமாக அவை கிராமங்களுக்குள் வருகின்றன. இதன் விளைவாகவே யானைகள் சுட்டுக் கொல்லப்படுகின்றன. யானைகள்- அவற்றின் தந்தங்கள், தலைகள் ஆகியவற்றுக்காகவும் கொல்லப்படுகின்றன. அண்மையில் கொழும்பில் நடந்த யானை பாதுகாப்பு பற்றிய கூட்டத்தில், ஆசிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்தின் தாரகமந்திரம்- யானைகளைப் பாதுகாத்தல் என்பதுதான். அங்கே மக்களுடன் சேர்ந்து இடம்பெயர்ந்த வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 300 யானைகளின் கதி என்ன என்பதும் ஆராயப்பட்டிருக்கிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாஉள முன்நிற் பவை.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ரத்வத்த மீண்டும் அரங்கிற்குள் நுழைகிறார்!

அநுருத்த ரத்வத்த என்பவரை எவரும் அவ்வளவு சுலபத்தில் மறந்திருக்கமாட்டார்கள்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர், அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி - சிறிலங்காவை முழுமையான, சகலவிதமான அதிகார பலங்களுடனும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த மூன்றாம் ஈழப்போர் காலகட்டத்தில், சர்வவல்லமை மிக்க மனிதராக - பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக - மின்சார எரிபொருள்துறை அமைச்சராக - தமிழ் மக்களுக்கு எதிரான போரை மிகத் தீவிரத்துடன் தலைமை தாங்கி நடத்திய அந்த அரசியல் ஜெனரலின் எழுச்சியும் படுமோசமானது. அவரது அவமானகரமான வீழ்ச்சியும் எவராலும் சுலபமாக மறந்துவிடக் கூடியதொன்றல்ல.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது, போர் மற்றும் அரசியல் தந்திரோபாயத்தின் அடிப்படையில், யாழ் குடாவை விட்டு, விடுதலைப் புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கிய நகர்வினை மேற்கொள்ள, அவர்களைத் தொடர்ந்து உயிர் பாதுகாப்புக் கருதி வலிகாமம் மக்களும் இலட்சக்கணக்கில் இடம்பெயர, இராணுவம் மிகச் சுலபமாக யாழ்.குடாவை ஆக்கிரமிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட, தனது தலைமையிலான இராணுவ நடவடிக்கையால்தான் யாழ். குடா கைப்பற்றப்பட்டது எனது பெருமை பேசி, மருமகளான ஜனாதிபதி சந்திரிகாவின் பாராட்டுதல்களைப் பெற்றதுடன், லெப்டினன்ட் கேணல் தரத்திலிருந்து, ஜெனரல் தரத்திற்கு எந்தவித தகைமையோ, தகுதியோ இன்றி உயர்த்திவைக்கப்பட்ட ரத்வத்தையின் வாய்ச்சவடால்தனம் மிகவும் பிரசித்திபெற்ற ஒன்றாகும்.

சூரியக்கதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து சத்ஜெய, எடிபல, ரணகோஷ, வோட்டர்ஜெட் என, பல ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன்மூலம் தன்னை இரண்டாவது சப்புமால் குமாரய என்று தானே புழுகிக்கொண்டு, அவர் ஆடிய வெ(ற்)றியாட்டம் எவராலும் மறந்துவிடக் கூடியதுமல்ல. ஆனால், அவரது வரலாற்றை மட்டுமல்ல, தமிழ்மக்களுக்கெதிரான சகல இராணுவ நடவடிக்கைகளையும் தகர்த்தெறிந்து கேள்விக்குறியாக மாற்றியது, அவர் அதிகப்பிரசங்கித்தனத்துடன் பெரும் ஆரவார ஆடம்பரத்துடன், சுபநேர முகூர்த்தம் பார்த்து ஆரம்பித்த ஜெயசிக்குறு நடவடிக்கையின் வீழ்ச்சியும், விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் நடவடிக்கையின் எழுச்சியும்தான்.

இது அவர் ஜெனரல் தரத்தில் இருந்து ஒரு சாதாரண சிப்பாய் தரத்திற்கு, தலைகுப்புற விழ வழிவகுத்தது.

அவரின் மருமகன் அநுரா பண்டாரநாயக்காவே அவரை ஒரு தடவை லான்ஸ் கோப்ரல் பதவிக்கே தகுதியுடையவர் என வர்ணித்த வரலாறும் உண்டு.

ஆனையிறவு வீழ்ச்சியின் பின்னர், தீச்சுவாலை வாங்கிய பலமான அடியுடன் ரத்வத்தை தனது முழு முகவரியையும் இழந்தவரானார். அதுவே சந்திரிகா ஆட்சியின் தோல்விக்கும் வழிவகுத்தது. தேர்தல் காலத்தில் - அவரும், அவருடைய புதல்வர்களும் செய்த அட்டூழியங்கள், மோசடிகள் மற்றும் கொலைகள் உட்பட சகல நடவடிக்கைகளும் அவர்களை சிறையுள்தள்ளி அவமானத்துள் உழல வைத்தன.

ஒரு இராணுவ ஜெனரல், ஒரு ஜெனரல் (பொது) மனிதனிலும் மோசமான ஒருவராக இனம்காட்டப்படார்.

ஒரு காலத்தில், ஜெனரல் பட்டமளித்து கௌரவித்த ஜனாதிபதி மருமகள் சந்திரிகாவே, அவரை தனது அரசிலுள்ள மிக யோகமான ஊழல் பேர்வழி அமைச்சர் என குற்றப்பட்டம் கொடுக்கும் நிலையும் ஏற்பட்டது. கொலை வழக்கு இன்னமும் முடிவுறாத நிலயையில், மிக அண்மையில் பிணையில் விடுதலையான அநுருத்த ரத்வத்தை இன்றுள்ள அரசியல் குழப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி, அரசியலில் தன் மீள் வருகையை உறுதி செய்யுமுகமாக தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறார் போல் உள்ளது.

ஒரு வேளை, ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மீண்டும் தனது பழைய பதவியைக் கைப்பற்றும் இலக்குடன் - அத்தகைய வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்ற இலக்குடன், தனது ஜெனரல் தனத்தை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளார்.

சிறைவாசத்தின்போது, கண்ணீர் விட்டு அழும் நிலைக்கு பரிதாபமாக தள்ளப்பட்ட ரத்வத்தையின் அப்போதைய கூனிக்குறுகிய நிலையில், அவருக்கு துணையாக எஞ்சியது அவரது கைத்தடி மட்டுமே.

எனினும், அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திற்கு வருகைதந்த ரத்வத்த, மீண்டும் சிறிலங்காவின் - குறிப்பாக கொழும்பின் பாதுகாப்பைப் பற்றி கவலையுடன் பேசிய அவர் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்பதை நினைவூட்ட முயன்றுள்ளார்.

மீண்டும் போர் ஆரம்பித்தால், கொழும்பு முற்றாக அழிக்கப்பட்டுவிடும் என்றும், புலிகள் மின்சார நீர்விநியோக மையங்களை இலக்கு வைத்துள்ளதாகவும், ஜனாதிபதி மீண்டும் நகரில் பாதுகாப்பு சோதனைத் தடைகளை அமுலுக்கு கொண்டுவரவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஏற்கெனவே தனது ஆலோசகர்களாக கதிர்காமரையும், அநுராவையும் நியமித்துவிட்டு குழப்பத்தில் நிற்கும் ஜனாதிபதிக்கு, ரத்வத்தையும் ஆலோசனை சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

ரத்வத்தையின் இந்த ஆலோசனை, அவரின் ரத்தவெறி இன்னமும் அடங்கவில்லை என்பதையே உணர்த்திநிற்கிறது.

ரத்வத்தவின் தாளத்திற்கு சந்திரிகா மீண்டும் பாட முனைவாரா?

## நாடும் நடப்பும்




# ஏனைய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து புதிய அரசை அமைக்கத் தயங்கோம்!

## களுத்துறையில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நாட்டில் நீடித்த நிலையான சமாதானத்தை கொண்டு வரும் எந்த முயற்சிகளிற்கும் நானும் எனது கட்சியும் தொடர்ந்தும் ஆதரவை அளிப்போம் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று களுத்துறையில் பண்டாரகம பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது அரசு முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகள் நம்பத்தகுந்தவையாக இல்லை. அதிலே பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனாலேயே, அதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியாமல் அரசு திண்டாடுகிறது. சமாதான முயற்சிகளிலுள்ள தவறுகளையும், தேக்க நிலைகளையும் சுட்டிக்காட்டுவது ஜனாதிபதி என்ற முறையிலே எனது பொறுப்பாகும். அது எனது உரிமையும்கூட. அது தொடர்பாக எவரும் தலையிடமுடியாது.

நோர்வே அரசினுடைய மத்தியஸ்தத்தை இந்த நாட்டிற்கு வரவழைத்தது எனது தலைமையிலான அரசே. நாம் அன்று அவர்களைச் சரியானமுறையிலே கையாண்டோம். ஆனால், இன்றைய அரசு நோர்வே நாட்டை சரியானமுறையிலே பயன்படுத்தத் தெரியாமல் இருக்கிறது. அது தொடர்பாக நிதானமான சிந்தனையும் இலக்கும் இல்லாது திண்டாடிக்கொண்டிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், நானும் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கி வருவோம். ஆனால், நாட்டைப் பிரிவினைக்கு உள்ளாக்கும் வகையிலே முயற்சிகள் எடுக்கப்படுமாக இருந்தால், அதனைத் தடுக்க எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவும் நான் தயாராக உள்ளேன். அதற்காக நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளோடு கூடடுச்சேர்த்து, புதிய அரசை அமைப்பதற்கும் தயங்கமாட்டோம். தற்போதும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை, அண்மையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி கூட்டமொன்றில் ஜனாதிபதி- ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்குமாறு வற்புறுத்துவோர்மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

### மூன்று வேளைகளிலும் சோறு சாப்பிடுமாறு

## அமைச்சர் திஸாநாயக்க கூறினாலும் நாடாளுமன்றில் மேல்நாட்டு உணவுகளே!

### ஏன் இந்த நிலை என்கிறார் டி.எம்.ஜயரத்ன

நாட்டில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால், மூன்று வேளைகளிலும் சோறு சாப்பிடுமாறு - விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும், நாடாளுமன்ற உணவுச்சாலையில் மேலைநாட்டு உணவு வகைகள் பரிமாறப்படுகின்றன என, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உணவுச்சாலையில, அரிசியினால் ஆக்கப்படும் உணவுப்பொருட்களை அறிமுகப்படுத்துமாறு, அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன கேட்டுள்ளார்.

அத்துடன், விசேடமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 3 வேளைகளிலும் சோறு சாப்பிடுவதாக இருந்தால், அதை தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறும் ஜயரத்ன கேட்டுள்ளார்.

## புலிகளுக்கு துப்பாக்கிகளை விற்றதாக தாய்லாந்து விமானப்படை அதிகாரி கைது!

விடுதலைப் புலிகளுக்குத் துப்பாக்கிகளை விற்றதாகக் குற்றஞ்சாட்டி, தாய்லாந்து விமானப்படையின் இளநிலை அதிகாரி ஒருவர் - தாய்லாந்து குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதான சார்ஜன்ட் சுச்சாய் கொம்பொய் என்ற தாய்லாந்து விமானப்படையின் தரைப் பாதுகாப்பு படையின் டொங் மொங் விமானத் தளத்தில் பணியாற்றும் இளநிலை அதிகாரியே கைதுசெய்யப்பட்டவராவார்.

இவர் கடந்த மே 12 ஆம் திகதி ரனொல் மாகாணத் தலைநகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் கார் தரிப்பிடத்தில் வைத்து, விடுதலைப் புலிகள் எனக் கூறப்படும் மூவருக்கு 13 பிஸ்டல்களை விற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

சார்ஜன் சுச்சாய் - நேற்று முன்தினம் காலை சொன்சூரி மாகாணத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டபோது, அவரிடம் இருந்து அனுமதிக்கப்படாத 2 துப்பாக்கிகள் மற்றும் 2 கிரனைட்டுக்களும் கைப்பற்றப்பட்டன. இவர் தாம் வேறு இலங்கையருக்குத் துப்பாக்கிகளை விற்றதாக ஒப்புக்கொண்டுள்ளார். இதேவேளை வல்புறபா பகுதியிலும் பன்மோ பகுதியிலும் உள்ள எட்டு ஆயுத விற்பனையாளர் நிலையங்களின் உரிமையாளர்கள் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

# உடற்கல்வித் துறை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் அரசு அக்கறையீனம்

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் தெரிவிப்பு

திட்டமற்ற முறையில் ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்வி துறையினால் - பல மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால், மாணவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது என, யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில்- மேலும் இலங்கையில் முதற்தடவையாக யாழ்.பல்கலைக்கழகத்தில், 1998 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வருட உற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பமானது. இக்கற்கை நெறியில் இருந்து முதலாம் அணி மாணவர்கள் வெளியேறி மூன்று வருடங்கள் பூர்த்தியாகியும், எதுவித வேலைவாய்ப்பும் இத்துறை சார்பாக கிடைக்கவில்லை என்பது, மாணவர் மத்தியில் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக, கடந்த காலங்களில் பலருடன் தொடர்பு கொண்டபோதும் பலன் தரக்கூடிய பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைய புள்ளி விபரங்களின்படி, உடற்கல்வி ஆசிரியருக்கு 200 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரியவருகிறது. இது தொடர்பாக அமைச்சரவைக்கு அறியப்படுத்தியுள்ளபோதிலும், ஆக்கபூர்வமாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், தொடர்ந்து மூன்று அணிகள் வெளியேறியுள்ளன. இது மாணவர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது மட்டுமன்றி, இத்துறையை ஆரம்பித்தவர்களை இது தொடர்பாக, எதுவித அக்கறையும் காட்டவில்லை என்பது மனவேதனைக்குரிய விடயமாகும் என்று உடற்கல்வி கற்ற மாணவர்கள் - கண்களில் நீரும், கைகளில் சான்றிதழ்களுமாக கலங்குகிறார்கள். இதனைக் கருத்திற்கொண்ட ஆசிரியர் சங்கம், உடற்கல்வித்துறை மாணவர்களின் வேலைவாய்ப்புத் தொடர்பாக, கல்வி அமைச்சருடன் பேச்சுக்களை நடத்தியது. அங்கு வைக்கப்பட்ட கருத்துக்கள் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும், இதுவரை எதுவித செயற்பாட்டையும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை.

எனவே யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விச சமூகத்தினர் - இதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச - உள்ளூர் மட்டங்களில் புலிகள் உருவாக்கும் அத்தியாயம்



"தற்போதைய அரசாங்கம் நாட்டில சமாதானத்தை ஏற்படுவதற்கான வாய்ப்பை முறையாகக் கையாளத் தவறிவிட்டது. இந்த அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து- ஏனைய அரசுகள் பதவியேற்ற காலத்தில் என்றுமில்லாதவாறு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தது.

ஒருபுறம் யுத்தத்தினால் தனிநாட்டை உருவாக்கிவிட முடியாது என்று, நாம் விடுதலைப் புலிகளுக்கு உணர்த்தியிருந்தோம். மற்றொருபுறம், சர்வதேச நாடுகள் - விடுதலைப் புலிகளைச் சாமாதானத்தைக் கைக்கொள்ளும்படி வலியுறுத்தியிருந்தன.

இவற்றைச் சரிவரப் பயன்படுத்தாது, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையைப பயன்படுத்தி, தம்மைப்பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் . இதற்கான வாய்பையே அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

திருகோணமலைத் துறைமுகத்தையும், கடற்படைத் தளத்தையும், சீனன்குடா விமான நிலையத்தையும், எண்ணெய்க் குதங்களையும் கைப்பற்றக்கூடிய விதத்தில், புலிகள் 13 முகாம்களை அமைத்து வருகின்றார்கள். யுத்தம் ஒன்று ஏற்படின், விடுதலைப் புலிகள் மூன்று மணித்தியாலத்தில் யாழ்ப்பாணத்தையும், திருகோணமலையையும் கைப்பற்றிவிடக் கூடிய தயாரிப்புக்களுடன் இருக்கின்றார்கள்."

இவ்வாறெல்லாம் கூறுபவர், வேறு யாருமல்ல. இந்த நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான். அண்மையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் பகுதிகளே இவை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலிலுள்ள இந்தக்காலப்பகுதியில், பேச்சுவார்த்தைகளைக் குழப்பவும், பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தவும், இவ்வாறான சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றன.

சமாதானப்பேச்சுவார்த்தைக் காலங்களில், புலிகள் புதிய முகாம்களை அமைத்து வருகின்றார்கள். சிறுவர்களைப் பலவந்தமாகத் தமது படையில் சேர்த்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

குரங்குப்பாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் பற்றியே அதிகளவில் விவாதிதத்துள்ளார்கள். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இந்த முகாம் தொடர்பாக பல சந்திப்புக்களை நடத்தியிருக்கின்றார்கள். இதற்கிடையில், விடுதலைப்புலிகள தமது புலிக்கொடியை ஏற்றுவது தொடர்பாகவும் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற மக்கள், பொதுநிகழ்ச்சிகளின்போது, தமது விருப்பதததிற்கு ஏற்ப, விடுதலைப் புலிகளின் கொடியைத் தேசியக்கொடியாக் கொண்டு ஏற்றிவருகின்றார்கள். இந்த விடயத்தைப் பெரிதுபடுத்தி, பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோய்விடுமோ என்ற அளவிற்கு, இந்தப் பிரச்சினை தீவிரமான ஒன்றாகக் கருதப்பட்டது. போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர்வரை இந்த விவகாரம் சென்று, அவர்கள் தலையீடுகள் இருந்தபோதும், இன்னமும் இப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

இத்தகைய விடயங்களுக்குச் சற்றுமுன்னால் நடந்த சம்பவம் தொடர்பாகவும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகும். கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால், சமாதானப் பேச்சுவார்த்தை குழம்பி - போர் தொடங்கிவிடும் ஆபத்துநிலை தோன்றியிருந்தது.



விடுதலைப் புலிகளின் கப்பல் - சர்வதேச கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது, வழி மறிக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டது. அந்த நிலையில், போராளிகள் தம்மை நிரபராதிகள் என எடுத்துச் சொல்லிய போதும் அவை வீண் வார்த்தைகளாக்கப்பட்டன. போராளிகளின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டமைதான், அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளியாயின. முற்றுப்புள்ளியாக்கப்பட்ட இந்த நிகழ்வைத் தொடர விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. பொறுமைகாத்துக் கொண்டனர். இவ்வாறு கடற்பகுதியில் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றன.

பேச்சுவார்த்தைகள் வெறும் பேச்சுவார்த்தைகளாகச் செல்வதை அவதானித்த விடுதலைப் புலிகள், தமது நிலையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டனர். வீணே கதைத்துக் கொண்டிருப்பதில் பலன் கிடையாது என்பதை உணர்த்தினர்.

தமக்கு என்ன வேண்டும் என்பதை கேட்பதற்கு, பலமான நிலையலிருக்கும் விடுதலைப் புலிகள் - அரசிடம் திட்டவரைபொன்றைத் தயாரித்துத் தருகின்றோம். அதில் கூறப்பட்டவை தொடர்பாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவோம் எனத் தெரிவித்திருந்தனர். அதற்கேற்ப, விடுதலைப் புலிகள் தற்போது இடைக்கால நிர்வாகத்திட்டநகல் ஒன்றைத் தயாரித்து முடித்திருக்கிறார்கள்.

பாரிஸில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு, இந்த திட்ட வரைபைத் தயாரித்திருக்கின்றனர். தற்போது விடுதலைப் புலிகளின் தலைவரின் தீவிர பரிசீலனைக்கு உட்பட்டிருக்கும் இந்த இடைக்கால நிர்வாகத் திட்டநகல், அரசிடம் கையளிக்கப் படவுள்ளது.

அரசாங்கம் இதுவரைகாலமும் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்து, இன்ன இன்ன விடயங்களை நாங்கள் தருகின்றோம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிவந்தது. அந்தவிடயங்களைத் தமிழர் தரப்பு பிரதிநிதிகள் ஆய்வு செய்து, அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று மறுத்துவந்தமையே நடந்தது.

தமிழர்தரப்புப் பிரதிநிதிகளே பேச்சுவார்த்தையைக் குழப்பிவந்தனர். நாங்கள் கொடுக்க தயாராகவிருந்தோம், அவர்கள்தான் பெற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்று பெரும்பான்மை இனத்தவர் பிரசாரம் வேறு செய்தார்கள்.



நாங்கள் கொடுப்பதை மறுத்துக்கொண்டு, எங்களுக்கெதிராக ஆயுதம் தூக்கிப்போராடுகிறார்கள் என்று கூறிக்கொண்டு, யுத்தத்தை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. சர்வதேசத்திலும் இவ்வாறானதொரு பிரசாரத்தை மேற்கொண்டு, தனக்கு ஆதரவாக வெளிநாட்டுச் சக்திகளைத் திரட்டிக்கொண்டிருந்தது. அது மட்டுமல்லாமல், பெருமளவிலான நிதியையும் பெற்று, யுத்தத்திற்கு ஒரு தொகை நிதியைப் பயன்படுத்தி, தமது சுகபோக வாழ்க்கையை நாடாத்துவதற்கு ஒரு தொகை நிதியை ஒதுக்கிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறாகக் கடந்தகாலங்களில் கிடைத்த வரலாறுகளைப் பாடமாகக்கொண்டு, ஒரு பலமானநிலையில் பேச்சுவார்த்தை மேசைகளில் கலந்துகொண்டிருக்கின்ற தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகிய புலிகள் நாங்கள் - இவற்றைத்தான் கேட்கின்றோம். எமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் இவைதான் என்றுகூறி, ஒரு திட்டவரைபைத் தயாரித்திருக்கின்றார்கள். இவர்கள் தயாரித்திருக்கும் இந்த திட்ட வரைபை- அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தால், நிலைமை விபரீதமாக அமைந்துவிடும்.

இந்த நிலையில் - உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் - விடுதலைப் புலிகள் புதியதொரு அரசியல்ரீதியான அத்தியாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதில் மிகையில்லை.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண விடுதலைப்புலிகள் முன்வைக்கும் யோசனைகளை, அரசு ஏற்காதுவிடின், பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லை என்று தமிழ்ச்செல்வன் கூறியதாக, அகாஷி தெரிவித்துள்ள கருத்து இதனைத் தெளிவு படுத்துகிறது.

**கஜன்**

# லெப். கேணல் தியாகி திலீபன் கனவு நனவாகும் நாள் தொலைவிலில்லை

பட்டினி கிடந்து பசியால் வதங்கி
பாழ்பட நேர்ந்தாலும் - எந்தன்
கட்டுடல் வளைந்து கைகால் ஒடிந்து
கவலை மிகுந்தாலும் - வாழ்வு
கெட்டு நடுத்தெருவோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் - மன்னன்
தொட்டு வணங்கிய தமிழ்மண்ணின் துயர்
தாங்க மறப்பேனா?

இது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகளில் தேனிசை செல்லப்பா பாடிய பாடல். இந்தப் பாடல்களையெல்லாம் வெற்று வரிகளாக்காமல், அதனை யதார்த்தமாக்கிய பெருமை ஈழத்தமிழ் மறவர்களையே சாரும். அதிலும், குறிப்பாக தியாகி திலீபனின் தியாகம் இன்னும் ஒருபடி மேலோங்கி நிற்கிறது.

1987 செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஒரு தமிழீழ அன்னையின் வீரத்திலகத்தோடு, நல்லைக்கந்தன் வீதியிலே நடந்ததுதான் திலீபனின் பட்டினிப்போர். அமைதி என்ற போர்வையில் ஈழத்தமிழர் மண்ணில் காலடி வைத்த இந்தியாவிடம் நீதிகேட்டு, அனுபவிக்க வேண்டிய வயதில் துளிநீர் கூட அருந்தாமல் - பல இலட்சம் மக்களின் விழிநீர் கரைய நல்லூரில் வதங்கினான் திலீபன்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், சுதுமலையில் திலீபனின் தலைமையில் நடந்த கூட்டத்தில்- அங்கு பிரசன்னமாகியிருந்த தேசியத் தலைவர் தன் உரையில்- "எமது போராட்ட வடிவம் மாறினாலும், போராட்ட இலட்சியம் மாறாது" என்று குறிப்பிட்டிருந்தார். அதன்படி- காலத்தின் கட்டாயத்திற்கேற்ப, ஓரே இலட்சியத்திற்காகப் போராட்ட வடிவத்தை மாற்றினார்கள் புலிகள். தமிழ்மக்களின் விடிவிற்காக, சுதந்திரத்திற்காக ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து, திலீபன் நடத்திய அஹிம்சைப் போர் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. ஆயுதத்தைக் கையில் ஏந்தி, மில்லரின் மின்னல்வரை - வீரத்தின் உச்சிக்குச் சென்றுவிட்ட புலிகளால், அஹிம்சை வழியிலும் சென்று போரிடமுடியும் என்பதை உலகம் வியந்து பார்த்தது.

சிறுவயதிலேயே தாயை இழந்து, தந்தையின் பாச வளர்ப்பிலே - சிறந்த முறையிலே கற்று, மருத்துவ பீடம்வரை முன்னேறிய பார்த்தீபன் பட்டப்படிப்பை விடுத்து, தமிழர் பட்ட துயரத்திற்கு முடிவுகாண திலீபன் என்ற புலியாக புதுவடிவம் பெற்றான். கல்வியிலே சிறந்தவன், வீரத்திலும் உயர்ந்துவிட்டான் என்பதற்கு இவன் தொடுத்த போரில் கண்ட பல வெற்றிகளே சான்று. போர்க் களத்திலே குண்டுபட்ட உடலில், துண்டுபட்ட குடலைக் கொண்டவன், அரசியலிலும் புலியாகத்தான் திகழ்ந்தான். யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த காலத்தில், அவன் ஆற்றிய பணி மக்களை அன்போடு, நட்போடு அணுகி வழிநடத்தும் பாணி எல்லாமே திலீபனுக்கு மெச்சத்தக்க உச்சம்தான்.

அன்று கோட்டை வாசலில் நின்று, 'இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி ஏறுகின்றதோ... அன்றுதான் சுதந்திர விடிவின் ஆரம்பம்' என்று திலீபன் கூறிய வார்த்தை இன்றும் காதுகளில் கேட்டபடிதான் உள்ளது. திலீபன் அன்று கண்ட கனவு நனவாகியது. யாழ். கோட்டை புலிகளால் மீட்கப்பட்டு, தகர்க்கப்பட்டது. அதன்மூலம் தமிழ்மக்களின் விடிவின் ஆரம்பத்திற்கு வலுச்சேர்க்கப்பட்டது.

நல்லூரிலே நான்காம் நாளிலே உடல் மிகமிகச் சோர்வுற்ற நிலையில்கூட, தெளிவாக 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்று கூறிய திலீபன்- அகிம்சை போர் நடத்தி பாரத தேசத்தின் சுதந்திரத்திற்கு தூணாக உயர்ந்து நின்ற காந்தி எனும் உத்தமன் பிறந்த் தேசத்தவர்க்ள், அஹிம்சை என்ற வார்த்தைக்கு ஆப்பு வைத்து, அதனை உதாசீனம் செய்ததால் - பன்னிரண்டாவது நாள் உலகமே கதற தன்னுயிரை விட்டுச் சென்றான். பாரதத்தின் நயவஞ்சகத்தால் ஈழமண் பெருவிருட்சத்தை இழந்து துடித்தது. திலீபனின் தியாகத்தின் எல்லையை, அவன் கொண்ட திடமான நெஞ்சத்தைக் கண்ட பாரதம் - புலிகளை ஏமாற்ற முடியாது! என்ற பாடத்தைப் படித்தது.

தேசியத் தலைவரின் தோழனாக, மக்கள் எல்லோருக்கும் உயிர் மூச்சாக நின்று, ஈழத் தமிழ்மக்களின் விடுதலைத் தீயை - தன்னை உருக்கி வளர்த்த திலீபன் மலரப் போகும் சுதந்திர தேசத்தின் ஆணி வேராக என்றும் இருப்பான். 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்று அவன் கூறிய வார்த்தை, நிச்சயம் உயிர் பெறத்தான் போகிறது. அதன் மூலம், தமிழ்மக்கள் நீண்ட காலமாக அனுபவித்த துன்பங்கள் நீங்கி, பகைகள், பகைப் பாசறைகள் ஈழமண்ணிலே இல்லாதொழிந்து, ஆயிரமாயிரம் மாவீரர்களதும், மக்களதும் குருதிக் கொப்பளிப்புக்களால் கருவெடுத்து, உருவெடுத்த சுதந்திரம் என்ற உன்னதப் பொருள் கிடைக்கத்தான் போகிறது மிக விரைவில்.



**அருள்விந்தன்**

# ஐ.நா சபை அலுவலகத்தின் அருகே பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்!

## இருவர் பலி, 12 பேர் காயம்



தற்கொலை குண்டுதாரியின் கார் சிதைந்த நிலையில்

பக்தாத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். 12 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளின் இருப்பிடமான 'கனல்' விடுதிக்கு அண்மையில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணுக்கு அண்மையில் காரில் வந்த ஒருவர், தன்னை வெடிக்கவைத்து இந்தத் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டார்.

இந்த தாக்குதலில், தற்கொலை குண்டுதாரியும், ஈராக்கியப் பொலிஸார் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு 25 கிலோ எடைகொண்ட வெடிமருந்து பாவிக்கப்பட்டதாகவும், தாக்குதலை நடத்திய கார் குண்டு வெடித்தபோது 15 மீற்றர் வரை தூக்கி, வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா - மேலும் பல சர்வதேச நாடுகளை ஈராக்கின் சமாதானப் படையில் இணைவதற்கும், ஈராக்கின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் ஐ.நா சபையிடம் கேட்டுள்ள வேளையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, சென்ற மாதமும் ஐ.நா காரியாலயம் கார் குண்டுதாக்குதலில் சேதமடைந்ததும், ஐக்கிய நாடுகளின் ஈராக்கின் பிரதிநிதி சேர்க்கியோ விஜெரா டீ மெலோ உட்பட 20 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து, ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கில் தனது செயற்பாடுகளைக் குறைத்துக் கொண்ட நேரத்தில் மேற்படி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

## ஈராக்கில் கூடுதல் சர்வதேச படைகள்:

# அமெரிக்காவின் கோரிக்கையை பிரான்ஸ் எதிர்க்கமாட்டாதாம்!

ஈராக்கில் கூடுதல் சர்வதேச படைகளை பணியில் ஈடுபடுத்துவதற்கு அமெரிக்கா விடுத்திருந்த கோரிக்கைக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த பிரான்ஸ், தற்போது இதற்கு ஓரளவு இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அதிபர் கடந்த திங்கட்கிழமை நியூயோர்க் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் - அமெரிக்கா விடுத்திருக்கும் கோரிக்கையை தான் எதிர்க்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் பிரான்ஸ் ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன், சர்வதேச படைகளை ஈராக்கிற்கு அனுப்புவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. படிப்படியாக ஈராக்கியர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும் என்றும் அமெரிக்காவிடம் கேட்டிருந்தது.

ஆனால், தற்போது - ஐக்கிய நாடுகளின் அனுசரணை இல்லாமல், உலக நாடுகள் - ஈராக்கின் அரசியல் அமைப்பை வரைவதற்கும், ஈராக்கிய தேர்தலை நடத்துவதற்கும் உதவமுடியும் என, பிரான்ஸ் அதிபர் ஜக்விஸ் ஷிராக் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈராக்கில் இறைமைமிக்க ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட காலஎல்லையை விதிக்கப்போவதாகவும், இதில் ஐக்கிய நாடுகளின் பணியும் உள்ளடங்கியதாக அமைய வேண்டும் என்றும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாகவும் ஷிராக் மேலும் தெரிவித்தார்.

இவை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், தனது முயற்சிகளிலிருந்து பிரான்ஸ் விலகிவிடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உலக நோக்கு

### பங்களாதேஷ் – இந்தியா இடையே புதிய போக்குவரத்து பாதை திறப்பு!

பங்களாதேஷுக்கும், இந்திய மாநிலமான திரிபுராவிற்கும் இடையே புதிய பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பாதையின் மூலம் - இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்த மாநிலங்களுடன் தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா நீண்டகாலமாகவே அதன் கிழக்குப் பகுதியில் அமைந்த மாநிலங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கு விரும்பி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதை மூலம் - திரிபுரா மாநிலத்திலுள்ள மக்கள் கொல்கத்தா, டெல்கி ஆகிய நகரங்களுக்கு இலகுவில் வந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தனிநாடாகப் பிரிந்தபோது, இந்தியாவினதும், பங்களாதேஷினதும் எல்லையிலிருந்த மக்கள், தமது உறவினர்களை பிரியவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்கள் தமது உறவினர்களை பார்ப்பதற்கு செல்ல அதிக பணம் செலவாவதால் இதுவரை நடந்து வருவதையே அதிகம் விரும்பினார்கள். ஆனால், தற்போது புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதால், இவர் கள் குறைந்த செலவில் வந்துபோகக் கூடியதாக இருக்கும் என கூறப்படுகிறது.

### புதிய பலஸ்தீனப் பிரதமர் அரசியற்கட்சிகளுடன் பேச்சு

பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக பதவியேற்குமாறு அரபாத்தால் கோரப்பட்டுள்ள தற்போதைய நாடாளுமன்ற சபாநாயகர் அஹமட் கூரேய் - பலஸ்தீன ஆட்சியாளர்களுடனும், பலஸ்தீன அரசியற் கட்சிகளுடனும் காஸா நகரத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். பேச்சுக்களின் முடிவில் அஹமட் கூரேய் கருத்துத் தெரிவிக்கையில் - நடைபெற்ற பேச்சுக்கள் பயனுள்ளதாக அமைந்ததாக தெரிவித்தார்.

எனினும், இந்தப் பேச்சுக்களில் பலஸ்தீனத்தின் மிகப் பெரிய விடுதலை அமைப்பான ஹமாஸ் இயக்கத்தின் உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பி.பி.ஸியின் செய்தியாளர் - நடைபெற்ற பேச்சுக்களில் ஹமாஸ் இயக்கம் கலந்துகொள்ளாமையால், பேச்சுகள் வெற்றிகரமாக அமைந்தது எனக் கூற முடியாது எனத் தெரிவித்தார்.

முன்னர் பலஸ்தீனப் பிரதமராக இருந்த முஹமட் அபாஸும் நேரடியாக ஹமாஸ் இயக்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தீவிரவாதிகளை முதலில் கட்டுப்படுத்துவதன் மூலம் அஹமட் கூரேய் - சமாதானத்திற்காகப் போராடுபவர் என்பதை என்பதை வெளிப்படுத்தலாம் என, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஷாஉல் மொபாஷ் தெரிவித்துள்ளார்.

## ஒரிசா மாநிலத்தில் 1999 இல் நடந்த

# மதபோதகர் கொலை வழக்கின் தீர்ப்பு அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது!



பாதிரியாரையும், அவரது பிள்ளைகளையும் சேர்த்து எரித்துக்கொல்லப்பட்ட கார்.

ஒரிசா மாநிலத்திலுள்ள மனோகர்பூர் என்ற கிராமத்தில் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமயப் பணிகளில் ஈடுபட்டுவந்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரஹம் ஸ்ரெயின் என்பவரையும், அவரது பிள்ளைகளையும் - தேவாலயம் ஒன்றின் முன்னால் வாகனம் ஒன்றினுள் வைத்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு, சென்றவாரம் இந்திய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 13 சந்தேக நபர்களுக்கும் எதிரான தீர்ப்பு வரும் திங்கட்கிழமை வழங்கப்படவிருக்கின்றது.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் இந்து மதத்தில் தீவிர பற்றுக்கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மதபோதகரான கிரஹம் ஸ்ரெயின் இந்துக்களை முஸ்லிம் மதத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிசெய்து வந்தார் என்று, அவருக்கெதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எனினும், கிரஹம் ஸ்ரெயின் 30 ஆண்டுகளாக ஒரிசாவில் குஷ்டரோக நோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை கவனித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஊர்சுற்றி எழுதுவது

ஜனநாயகம் என்றால் என்ன? மக்களுக்காக, மக்களால் என்று லிங்கன் சொன்ன தத்துவத்தை, இதற்குச் சான்றாக உரைப்பார்கள்.

மக்கள் யார்?

சந்திரிகா அம்மையாரும் சரி, அவரது அம்மா சிறிமா அம்மையாரும் சரி இலங்கை அரசியலில் சாணக்கியன் என்று கருதப்பட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் சரி எமது மக்கள் என்று விழித்தபோதெல்லாம் எந்த மக்களைக் கருத்தில்கொண்டு சொன்னார்கள்? சொல்கிறார்கள்?

சமீபத்தில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு வைபவத்தில் பேசுகையில், ரணில் அரசும் - புலிகளுக்கும் என்னதான் சமாதான ஒப்பந்தம் செய்தாலும், நானும் எமது மக்களும் ஏற்றுக்கொண்டால்தானே அது செயற்படமுடியும் என்று கேட்டார்.

இவர் சொல்லும் மக்கள் யார்?

1961 ஆம் ஆண்டில், வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில், தந்தை செல்வா தலைமையில், சுமார் மூன்றுமாதகாலம் அரச அலுவலகங்கள் இயங்காதவாறு தமிழ்மக்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தினர்.

மக்களுக்காக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சியினர் மக்களைக்கொண்டு நடத்திய இந்தச் சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசினால் அனுமதிக்கமுடியாது என்றுகூறி ஆயுதப் படைகளைக்கொண்டு நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளை அடித்து நொறுக்கி வெற்றிகண்டார் சிறிமா.

ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டோம் என்று, இதன்பின் விடுத்த அறிக்கையில் பிரதமர் சிறிமா அறிவித்தார்.

சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து, நிறைவேற்றுவதற்காக மக்களின் ஆணையைத் தேர்தலில் பெற்றிருப்பதாக - 1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சொன்னார்.

சிங்களம் மட்டும் சட்டத்தை நாட்டின் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்வதில்லை என்பதற்கு வடக்கு - கிழக்குத் தமிழர் தாய மக்களின் ஆணையைப் பெற்றிருப்பதாக 1956 தேர்தலில் வடக்கு கிழக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அத்தனை பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

ஜனநாயக முறையில் ஆட்சிப்பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தன - போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று நாடாளுமன்றத்திலேயே பிரகடனம் செய்து இனக்கலவரம் பரவுவதற்குத் தூண்டினார்.

பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கிறார்கள் இத்தொகுதிகளில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவார்கள். ஆகக்கூடுதலாக வாக்குகளை பெற்றவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிப்பார்கள். தேர்தலைக் கண்காணிப்பதற்கென. வெளிநாடுகளிலிருந்துவரும் நடுநிலையாளர்களும் இந்த முடிவை அங்கீகரிப்பார்கள்.

வடக்கில் சில வருடங்களுக்கு முன் (அதாவது 1994 ஆண்டு தேர்தலாக இருக்கவேண்டும்) வேட்பாளர்கள் சிலர் நான்கு ஐந்து வாக்குகள் மட்டுமே பெற்று வெற்றியீட்டி நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். ஜனநாயக முறைப்படி இவர்கள் பெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஈ. பி. டி. பியைச் சேர்ந்தவர்கள்.

இத் தேர்தலில் நடுவர்களாகச் செயற்பட்ட கண்காணிப்புக் குழுவினரின் ஒரு பிரிவினர் ஈ. பி. டி. பியினர் தேர்தல் காலத்தில் நடந்துகொண்ட முறையும் பெற்ற வெற்றியும் இவர்களை மக்கள் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறதென்று அறிக்கை கொடுத்தனர்.

ஆனாலும், ஈ. பி. டி. பியினர் ஆயுதங்களைக் கையளித்து ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு "ஜனநாயக வழிக்குத்" திரும்பியவர்கள்.

இந்தத் தேர்தல் காலத்தில் பிரசாரத்துக்காக தங்களால் தீவுப்பகுதிக்குச் செல்லமுடியாமல் ஈ. பி. டி. பியினர் தடைசெய்கிறார்கள் என்று, ஜனநாயக முறையில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி நாடாளுமன்றத்திலேயே முறையிட்டார்.

இரண்டாயிரமாண்டுத் தேர்தலில் தீவுப்பகுதிக்குச் சென்ற தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தாக்கப்பட்டனர். இதில் ஆதரவாளர் இருவர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர் படுகாயமடைந்தனர். இப்போது மேல்நீதிமன்றில் வழக்கு நடைபெறுகிறது.

இப்பொழுது ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாசுஷியைச் சந்திக்க ஜனநாயக ரீதியாகச் செயற்படும் ஈ. பி. டி. பி எடுத்த முயற்சிக்கு, அத்தூதுவர் மதிப்பளிக்கவில்லை. ஈ. பி. டி. பி இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது.

ஜனநாயகம் என்றால் என்ன? அது எப்படியெப்படியெல்லாம் நடக்கிறது!

ஆபிரகாம் லிங்கம் இப்பொழுது இங்குவந்தால் புதிய தத்துவம் சொல்வாரா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களுக்கு சோதிடர்கள் மீதும், ஆருடங்கள் மீதும் அளவற்ற நம்பிக்கையிருப்பது பகிரங்கமான விடயம்.

அதனைவிட சாமியார்கள் மீதும் பக்தி அதிகம்.

இந்த சாமியார்கள் பௌத்த சாமியார்கள் அல்ல. இந்துச் சாமியார்கள்தான் என்பதும் முக்கியமான விடயம்.

சோதிடர்கள்கூட உள்ளூர் சோதிடர்கள் அல்ல. அதுவும்கூட வெளியூர் -குறிப்பாக இந்தியச் சோதிடர்கள்தான். தேர்தல் என்றால் நாள் குறிப்பது முதல் வேட்புமனுத் தாக்கல் செய்வதுவரை - சோதிடர்களின் ஆலோசனையின்படிதான் சந்திரிகா, அநுரா உட்பட பல தலைவர்களும் நடந்துகொள்கிறார்கள்.

ஏன்- 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைகூட சுபநேரம் பார்த்து தெய்வ ஆசிக்காகப் பிரார்த்தனைகள் நடத்தியே மேற்கொள்ளப்பட்டதும் தெரிந்தவிடயமே...

சோதிடத்தை அவர்கள் நம்பினார்கள்... நம்புகிறார்கள். ஆனால், சோதிடர்கள் கூறும் பலன்தான் வேலை செய்வதில்லை.

இப்போது ஜே.பி.யினர், சி.ல.சு.கட்சி தலைவர்கள் தங்களை நம்புவதைவிடவும், சோதிடர்களையே அதிகம் நம்புகிறார்கள் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

'அப்படியானால் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரவேண்டாமென்று சோதிடர்களா சந்திரிகாவுக்கு கூறினர்? இந்த விடயத்தில் சோதிடர்களின் ஆருடமோ, அல்லது ஆலோசனையோ சரியானதுதான்' - என்கிறார் கந்தப்பு மாஸ்டர்.

-தெருவாசி

## வவுனியா நகரில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வைக் குழப்பமாட்டோம்; நேற்றைய சந்திப்பில் படையினர் உறுதிமொழி!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வு தொடர்பாக - படைத் தரப்பினருடன், நேற்றுப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், படைத் தரப்பில் - வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.பி.மிக்சின் ஆகியோரும், விடுதலைப் புலிகள் தரப்பில் - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனும், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில் - சிதம்பரநாதன், கஜேந்திரன், விந்தன், ஜன்சியத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புலிகளும், அவர்களைச் சார்ந்தோருமே 'பொங்கு தமிழை' நடத்துகின்றார்கள் என்பது எமக்குத் தெரியும். இருந்தாலும், வவுனியா நகரில் நடக்கவிருக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வை படைத் தரப்பினர் எக்காரணம் கொண்டும் குழப்பமாட்டார்கள் எனவும், ஆனால் புலிக்கொடி ஏற்றும் விவகாரத்தில்தான் தனது எதிர்ப்பினைத் தெரிவிப்பதாகவும் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலா தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஏற்பாட்டுக் குழுவினர், புலிகளைச் சார்ந்தவர்கள்தான் 'பொங்கு தமிழை' நடத்துகின்றார்கள் என்று இங்கு கூறியதை நாம் ஏற்கமுடியாது எனவும், நாம் இதுவிடயமாக மக்களை அழைத்துவருகின்றோம். அவர்களிடமே இதுபற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் எனத் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு சுமுகமான முறையிலும், படையினர் 'பொங்கு தமிழை' குழப்பமாட்டார்கள் என்ற உறுதிப்பாட்டுடனும் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (03,29)

### ஈ.பி.டி.பி உறுப்பினரின் வாள்வெட்டில் ஒருவர் காயம்

பருத்தித்துறையைச் சேர்ந்த 55 வயதுடைய சூசைப்பிள்ளை சவிரிமுத்து என்பவர் - ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரால் வாள்வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் மற்றுமொரு பொதுமகன் ஒருவருடன் இணைந்து வாள்வெட்டு நடவடிகையில் ஈடுபட்டதாக ஊடக டிகையில் ஈடுபட்டதாக ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

## மாலைதீவு கலவரத்தில் காயமுற்ற மேலும் பன்னிருவர் கொழும்புக்கு!

(கொழும்பு)

மாலைதீவில் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தினால் படுகாயமடைந்த மேலும் 12 பேர், நேற்று விசேட விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இங்கு கொண்டுவரப்பட்டவர்களில், நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மாலைதீவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கலவரத்தினால் பல வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், அரச அலுவலகங்களும் பாதிப்புக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் பிரதியமைச்சரின் பாதுகாவலர் காலியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலி!

(கொழும்பு)

காலி - ஹபராதுவ என்ற இடத்தில் வைத்து - முன்னாள் பிரதியமைச்சர் மேவின் சில்வாவின் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாகனம் ஒன்றில் வந்த துப்பாக்கிதாரிகள் பாதுகாப்பு ஊழியர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் கொல்லப்பட்டார்.

பாதாள உலகக் கோஷ்டி அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவளரே, இவர் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடைக்கால நிர்வாகம் வழங்குவதை எதிர்த்து கொழும்பில் இன்று பிக்குகள் சங்கம் கூடுகிறது!

(கொழும்பு)

தேசிய சங்கசபை என்ற பிக்குமார் சங்கம் இன்று, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடவுள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டாம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோருவதற்கே, இந்த மாநாடு அவசரமாகக் கூட்டப்படுகின்றது.

இந்த மாநாட்டுக்கு நாடு முழுவதும் உள்ள புத்தபிக்குகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாடு - பிக்குமார் சங்கத்தின் தலைவர் வெல்லாவெல மெத்தானந்த தேரர் தலைமையில் நடைபெறவுள்ளது. (01)

## 4 அமைச்சுகளை தந்தால் பொ.ஐ.முவுடன் கூட்டணி!

### ஜே.வி.பி எம்.பி கூறுகிறார்

(கொழும்பு)

மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவதாக இருந்தால் - கல்வி, விவசாயம், மக்கள் தொடர்பு, மீன்பிடி ஆகிய அமைச்சுக்கள் தமக்கு தரப்படவேண்டுமென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்கந்த தெரிவித்தார்.

தாம் நாட்டிற்காக உழைக்க விரும்புவதால், அதைக் கேட்பதில் தவறில்லை எனவும் அவர் தெரிவித்தார். ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் பல மாதங்களாகத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது குறித்து கருத்து வெளியிட்ட லால்கந்த, தமது கட்சியைச் சேர்ந்த நந்தன குணதிலகவுக்கு கூட்டு கட்சியின் தலைமைப்பதவி கொடுக்க வேண்டுமென கேட்வில்லை என்று தெரிவித்தார்.

அத்துடன், தாம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பையும் கேட்டதாக ஜனாதிபதி தெரிவித்தது, தவறான கருத்தெனவும் அவர் குறிப்பிட்டார்.

## மக்கள் ஏற்றுக்கொண்ட நிர்வாகம்...

னதும் மக்களினதும் நிலைப்பாடுகள் சம்பந்தமாக அவர்களுக்குத் தெளிவாக்கியிருக்கிறோம். குறிப்பாக வடக்கு -கிழக்கில் சீர்குலைந்து போயிருக்கின்ற நிர்வாக கட்டமைப்புக்களைச் சீரமைத்து சீர்குலைந்து போயிருக்கின்ற எங்களுடைய மக்களின் வாழ்வாதாரங்களை, வாழ்வு அடிப்படைத்தேவைகளை கட்டியெழுப்புவதற்கான சூழ்நிலைகளை எதிர்காலத்தில் எப்படி அமைத்துக் கொள்வது சம்பந்தமான எங்களுடைய தீர்மானங்கள் அவர்களுக்குத் தெளிவாக்கினோம். குறிப்பாக இடைக் கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தினோம். ஏனெனில் தமிழர் தாயகப் பிரதேசத்திலே முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களாக இருந்தாலும் அது நிச்சயமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அதிகாரமுள்ள நிர்வாக கட்டமைப்பு அலகுக்கூடாகவே அது சாத்தியப்படும் என்பதை அவர்களுக்கு தெளிவாக்கியிருக்கின்றோம்.

*கேள்வி:-* அயர்லாந்துப் பயணம் பற்றி ஒரு தகவல் வெளி வந்திருக்கிறது அதுபற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* அயர்லாந்துப் பயணம் எங்களுடைய இடைக்கால நிர்வாக வரைவை நாங்கள் நோர்வேக்கூடாக அரசாங்கத்திற்கு கையளிப்பதற்கு முன்னால், எங்களுடைய சட்ட நிபுணர்களோடு மீண்டும் ஒரு தடவை ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டியிருக்கின்றது. அதுபோல வெளிநாடுகளில் உள்ள நிபுணத்துவம் சார்ந்தவர்களோடும் சட்டங்கள் சார்ந்தவர்களோடும் நாங்கள் சில முக்கியமான விடயங்கள் ஆலோசிக்க வேண்டியிருப்பதால் அந்த மாநாட்டை ஒழுங்குபடுத்தியிருக்கிறோம்.

*கேள்வி:-* வவுனியாவில் நடைபெறவிருக்கின்ற பொங்கு தமிழ் பற்றி ஏதாவது கூறமுடியுமா?

*பதில்:-* வவுனியாவில் எமது மக்கள் தங்களுடைய அரசியல் உரிமைகளை, மனஉணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்துவதற்காக அண்மைக் காலமாக ஒவ்வொரு மாவட்டம் தோறும் ஒன்றுகூடி தமது உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றார்கள். தமது கருத்துக்களை சர்வதேச அரங்கிற்கும் ஏனையோருக்கும் வெளிபடுத்துகின்ற உணர்வுபூர்வமான நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே நாம் இதனைக் கருதுகிறோம்.

*கேள்வி:-* மடு வீதியை திறக்க இழுத்தடிக்கும் அரசாங்கம் விலாச்சி வீதியை திறப்பதற்கு கண்காணிப்புக்குழுவை நாடியிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது அது பற்றி?

*பதில்:-* எங்களுக்கு இது சம்பந்தமான உத்தியோக பூர்வமான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை கிடைத்த பிறகு கருத்துச் சொல்கிறோம்.

*கேள்வி:-* தமிழர்கள் ஏற்றுக்கொண்ட நிர்வாக அலகினூடாகத்தான் நிதிகள் கையாளப்படவேண்டுமென நீங்கள் கூறியிருக்கிறீகள். இன்றைய சந்திப்பில் இதற்கு எவ்வகையான பதிலைத் தந்தார்கள் பிரதிநிதிகள்?

*பதில்:-* அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் இது ஒரு யதார்த்தநிலை, எங்களுடைய கருத்தல்ல. இது இங்கேயுள்ள மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் 50 வருட காலமாக போராடி 25 வருடங்களாக எங்களுடைய தலைவரின் வழி நடத்தலில் மக்கள் மிகவும் நம்பிக்கை கொண்டு முழு மக்களும் எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கும், ஆயுதப் போராட்டத்திற்கும் முழு அளவில் ஆதரவு தந்து பங்கெடுத்து தங்களுக்கொரு உறுதிப்பாடான அரசியல் இலாபத்தை வேண்டி நிற்கின்றார்கள். எனவே கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் சர்வதேச சமூகத்திடம் வடக்கு-கிழக்கிற்கான அபிவிருத்தி என்று சொல்லி பெருமளவு நிதிகளைப் பெற்று அவை முற்றுமுழுதாக தமிழர் தாயகப் பிரதேசத்தை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே மக்கள் மனதில் அது பெரிய அச்சமாக இருக்கிறது. அதனை நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தவேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. இனிவரும் காலங்களில் சர்வதேச சமூகம் தமிழர் தாயகத்திற்கும் தமிழ் மக்களிற்கும் செய்கின்ற உதவிகள் என்பது தமிழ் மக்களிற்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் தமிழர்களுக்கு உறுதிப்பாட்டை அளிக்கக்கூடிய வகையில் அது அமையவேண்டுமாக இருந்தால் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இந்த இடைக்கால ஏற்பாடாக ஒரு அதிகாரமுள்ள இடைக்கால கட்டமைப்பு ஒன்று நிறுவ வேண்டியதை அவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம். அவர்களும் அதனைப் புரிந்துகொண்டார்கள். ஏனெனில் இங்கே உள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களின் குழப்ப நிலைகளும் பலவீனத்தையும் ஏற்கனவே அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதனை அவர்கள் வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள்.

*கேள்வி:-* இந்த சமாதான காலத்திலும் நிதியைக் கையாண்டு வேலைத திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக எந்த விதமான வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை இந்த நிலைப்பாடுகள் தொடர்பாகவும் மேலும் பேசினீர்களா?

*பதில்:-* நிச்சயமாக ஏனெனில் தமிழர் தாயக பிரதேசத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டு வெடிச்சத்தங்களும் உயிர் இழப்புக்களும் ஓய்ந்திருக்கிறதே தவிர சீர்குலைக்கப்பட்ட எமது மக்களுடைய வாழ்வு நிலைகளில் எவ்வித சீர்பாடும் ஏற்படுத்தப்படவில்லை. தமிழ் மக்கள் தொழிலில் ஈடுபட முடியாத நிலை, இராணுவ நெருக்குவாரங்களும் மேலும் பல கட்டுப்பாடுகளும் இறுக்கமடைந்து கொண்டு போகின்றது. அதனால் எமது மக்களுடைய வாழ்வு நிலையினில் இயல்புநிலை ஏற்படவில்லை உண்மையிலே இந்த சமாதான முன்னெடுப்பின் அடிப்படை அம்சமே ஒரு இயல்பு நிலையைக் கொண்டு வருவதாகும். அது இங்கே ஏற்படுத்தப்படாதது மக்கள் மத்தியில் நம்பிக்கையீனமும் விரக்தியும் ஏமாற்றமும்தான் என்பதை அவர்களுக்கு தெளிவாக்கினோம். சர்வதேச சமூகம் இங்கு செய்கின்ற உதவிகள் தமிழர் தாயக பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்கள், ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட வகையில் அந்த மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் ஒரு உறுதிப்பாட்டை எடுத்துக்கொண்டுதான் சர்வதேச சமூகம் இங்கே உள்ள உதவிகளை கொடுப்பதற்கோ அல்லது செய்வதற்கோ முன்வரவேண்டும் என்ற எமது எதிர்பார்ப்புக்களை தெளிவாக்கியிருக்கின்றோம் இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

### சுகாதாரசேவை...

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன அறிவித்துள்ளார். இதேவேளை, சுகாதார ஊழியர்கள் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று கொழும்பு லிப்ரன் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை, தமது போராட்டம் தொடருமென சுகாதார சேவைகள் சங்கம் அறிவித்துள்ளது. (01)

### கூட்டணி ...

நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, மீண்டும் கூட்டணி அமைப்பது பற்றி ஆராயப்படும் என, இரண்டு கட்சிகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### திருகோணமலை...

ளுக்கு வெளியிட்டேன். இதனைப் பலர் எனக்கு எதிரான பிரசாரமாக திசைதிருப்பி உள்ளார்கள். நான் அரசியல் வாழ்க்கைக்கு உகந்தவன அல்ல எனவும் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் அரசியலமைப்பு தொடர்பாக - நான் சத்தியப்பிரமாணம் செய்துள்ளேன். இலங்கையில் இன்னொரு நாடு உருவாவதையோ, அதறகான முயற்சிகள் எடுக்கப்படுவதையோ நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளின் பத்துத்...

சந்திப்பு விடுதலைப் புலிகளின மட்டக்களப்பு அலுவலகத்தில் இடம் பெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுகளைத் தொடர்ந்து பேணும் நோக்கில், காத்தான்குடிக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள் நேரடியாகச் சென்று முஸ்லிம் மக்களுடன் உரையாடுவது எனவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இணைப்பாளராக நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா செயற்படுவார் எனவும் எதிர்வரும் சனிக்கிழமை கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் காத்தான்குடிப் பகுதி விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராய்வதெனவும் நேற்றைய கூட்டத்தில் ·முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ்ப் பகுதிகளில் முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உரிய முழுப் பாதுகாப்பும் அனுமதியும் நேற்றைய சந்திப்பின்போது விடுதலைப் புலிகளால்வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்குமான சந்திப்புக்கள் பிரத்தியேகமாகத் தொடர்ந்து இடம் பெறுவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.